REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

தினகரன்

THINAKARAN

தினகரன்

2022 நவம்பர் 29 செவ்வாய்க்கிழமை

வரு. 90 இல. 282 | Tuesday 29, November, 2022 | 36பக்கங்கள் | 50/-



மஹவ - யாழ் ரயில் சேவை ஜன.15 முதல் நிறுத்தப்படும்

05 மாதங்களின் பின் சிறந்த சேவை - பந்துல

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனவரி 15ஆம் திகதி தொடக்கம் 5 மாதங்களுக்கு மஹவயில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலான புகையிரத சேவை நிறுத்தப்படும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன நேற்று (28) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

04

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வகையில்

புலம்பெயர் அமைப்புக்களின் உதவிகளை பெற விசேட ஏற்பாடு

ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து சர்வதேச தொடர்பு அலுவலகம்

வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் சபையில் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் புலம் பெயர் அமைப்புகளுடன் தொடர்புகளை மேம்படுத்தும் வகையில் சர்வதேச தொடர்பு அலுவலகம் ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக

04

இலாபமீட்டும் நிறுவனமாக லேக்ஹவுஸ் முன்னேறியுள்ளது

சபையில் இராஜாங்க அமைச்சர் சாந்தபண்டார

லோரன்ஸ் செல்வநாயகம்

லேக்ஹவுஸ் நிறுவனம் தொடர்ந்து நட்டம் ஈட்டி வருவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. கடந்த சில மாதங்களாக அது இலாபம் ஈட்டும் நிறுவனமாக முன்னேற்றமடைந்துள்ளதாக ஊடகத் துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த வகையில் கடந்த அக்டோபர் மாதம் 25 மில்லியன் ரூபாவையும் நவம்பர் மாதம் 30 மில்லியன் ரூபாவையும் அந்த நிறுவனம் இலாபமாகப் பெற்றுக்

04

ஊடக சுதந்திரத்திற்கு எதிராக அரசு ஒரு போதும் செயற்படாது

சமூக ஊடகங்களை கண்காணிக்கும் வகையில் புதிய சட்டம் வருகிறது

லோரன்ஸ் செல்வநாயகம்

தாய் நாட்டின் அபிவிருத்தி இன நல்லிணக்கம், சர்வதேச உறவுகளுக்கு ஊடகங்கள் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று சபையில் அறைகூவல்

ஊடகங்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் சுதந்திரத்திற்கு எதிராக ஒருபோதும் செயற்படப் போவதில்லை என அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஊடகங்கள் தாய் நாட்டுக்காக பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய அமைச்சர், சமூக ஊடகங்களை கண்காணிக்கும் வகையிலான சட்டமொன்றை கொண்டு வருவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் சபையில் தெரிவித்தார்.

அதேவேளை, ஊடகங்கள் உயர் ஊடக கலாசாரத்தைப் பேணும் வகையில் செயற்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடை பெற்ற போக்குவரத்து, ஊடகத்துறை, வெளி விவகாரம் மற்றும் நெடுஞ்சாலை அமைச்சுக்களுக்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

ஊடகங்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் சுதந்திரத்திற்கு எதிராக ஒரு போதும் செயற்படப் போவதில்லை. சமூக ஊடகங்கள் ஊடக நெறிமுறைகளுக்கு அமைய செயற்படுகிறதா என்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

ஊடகங்களின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் மறுக்கவில்லை. ஊடகச் சுதந்திரத்திற்கு எதிராக செயற்படும் போது எதிர்கொள்ள நேரும்

04

ஐ.நா தலைமையகத்தில் மகாத்மா காந்தி சிலை

அடுத்த மாதம் 14 இல் திறப்பு விழா

ஐ.நா பாதுகாப்பு துறைத் தலைமைப் பொறுப்பை இந்தியா அடுத்த மாதம் (டிசம்பர்) ஏற்கவுள்ளது. இதையொட்டி மகாத்மா காந்தியின் மார்பளவு சிலையொன்றை ஐ.நா.வுக்கு இந்தியா பரிசளித்துள்ளது.

இந்த சிலை ஐ.நா. தலைமையகத்தின் வடப குதியில் உள்ள புல்வெளியில் நிறுவப்படவுள்ளது. எதிர்வரும் 14 ஆம் திகதி மத்திய வெளியுறவு அமைச்சர் ஐ.நா. செல்லவுள்ளார். இதன்போது ஒரு அங்கமாக

04

சாரதி அனுமதிப் பத்திர முறைமையில் மாற்றம்

புள்ளிகள் அடிப்படையில் தண்டம் - லசந்த

சாரதி செய்யும் தவறுகளுக்கு புள்ளிகளை குறைத்து அதனுடன் தொடர்புடைய தண்டனைகளை விதிக்கும் முறைமை எதிர்வரும் காலங்களில் அமுல்படுத்தப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

வீதியில் வாகனங்களை செலுத்தும் போது தவறு செய்யும் சாரதிகளுக்கு சாரதி அனுமதிப் பத்திரத்தின் கீழ் 24 புள்ளிகளுக்கு உட்பட்டு அபராதம் விதிக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு ஓட்டுநர் 24 புள்ளிகள் வரம்பை அடைந்தவுடன்,

04

பொருளாதார நெருக்கடி குறித்து ஆராய

அமைச்சர் அலி சப்ரி இன்று அமெரிக்கா விஜயம்

வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி இன்று (29) அமெரிக்காவிற்கு விஜயம் செய்யவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விஜயத்தின் போது, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஆண்டனி பிளிங்கென் மற்றும் அந்நாட்டின் உயர்மட்டப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாட உள்ளார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து வெளிவிவகார அமைச்சரின்

04

காணாமல் போன மீனவர்கள் 64 நாட்களின் பின் கண்டுபிடிப்பு

அந்தமான் தீவில் தஞ்சமடைந்த நிலையில் மீட்பு

கடந்த செப்டெம்பர் மாதம் ஆழ்கடலுக்குச் சென்று காணாமல் போன வாழைச்சேனை பகுதியைச் சேர்ந்த நான்கு மீனவர்களும் அந்தமான் தீவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. காணாமல் போன மீனவர்கள் தொடர்பில் 64 நாட்களின் பின்னர் நேற்று முன்தினம் (27) மாலை தகவல்

04

திருகோணமலைக்கு மேலும் 03 புதிய பிரதேச செயலகங்கள்

அவசியம் உருவாக்கப்பட வேண்டும் - இம்ரான் மகரூப்

திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள 11 பிரதேச செயலக பிரிவுகளின் கிராம சேவகர் பிரிவின் எண்ணிக்கையினையும், சனத்தொகையின் எண்ணிக்கையினையும் குறிப்பிட்டு திருகோணமலை மற்றும் கிண்ணியா பிரதேச செயலக பிரிவுகளில் தலா ஒரு நகர சபையும், ஒரு பிரதேச சபையும் காணப்படுகின்றது. இருந்தபோதிலும் புள்ளி விபரங்களை பார்க்கும் பொழுது திருகோணமலை மாவட்டத்தில் மேலும் மூன்று புதிய பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

04

விவசாயிகள், மீனவருக்கு சீனாவினால் இலவச டீசல்

10.6 மில். லீற்றர்களை வழங்குவதாக தெரிவிப்பு

சீனாவினால் வழங்கப்படும் 10.6 மில்லியன் லீற்றர் டீசல் இலவசமாக வழங்கப்படும் என இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

2022/23 பெரும்போகத்தில் இலங்கை முழுவதும் 342,266 ஹெக்டேயர் நெல் வயல்களை அறுவடை செய்வதற்காக 232,749 விவசாயிகளுக்கு எரிபொருள் இலவசமாக வழங்கப்படும். மேலும், இலங்கையில் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடும் 3,796 மீன்பிடி கப்பல்களுக்கும் சீனாவினால் இலவசமாக டீசல் வழங்கப்படும் என சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

ஊடகங்கள் சிலவற்றில் பொய்யான செய்திகள்;

பஷில் விமான நிலையத்திற்குரிய கட்டணத்தை செலுத்தியுள்ளார்

SLPP பொதுச்செயலாளர் சாகர காரியவசம் விளக்கம்

தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டு வெளிநாடு சென்றிருந்த முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ அண்மையில் நாடு திரும்பிய போது, விமான நிலைய செயற்பாடுகளுக்கான கட்டணங்கள் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினால் செலுத்தப்பட்டதாக வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

04

Facebook களியாட்ட நிகழ்வு சுற்றிவளைப்பு

வெலிகமவில் 08 பேர் அதிகாலை கைது

வெலிகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெலிகம கடற்கரையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முகநூல் களியாட்டமொன்று சுற்றிவளைக்கப்பட்டு போதைப்பொருள்கள்

04

ஐக்கிய அரபு இராச்சிய தூதுவர் பிரதமர் தினேஷுடன் சந்திப்பு

இலங்கையில் சக்திவள துறையில் ஐக்கிய அரபு இராச்சியம் முதலீடுகளை செய்வதற்கான ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் காலித் நாசர் அல்அமெரி தெரிவித்தார்.

04

கிழக்கின் தனித்துவத்தைப் பாதுகாத்து

வடக்கின் தலைவர்கள் முன்வைக்கும் தீர்வுக்கு ஆதரவு வழங்க தயார்

03

மாவீரர் நாள் நினைவு கூரல் நிகழ்வுகள்;

தடைகள் ஏற்படுத்தாமை நல்லிணக்க சமிக்ஞையே

03

அவசர பராமரிப்பு காரணமாக

கொழும்பில் இன்று 12 மணிநேர நீர்வெட்டு

அவசர பராமரிப்பு பணிகள் காரணமாக கொழும்பில் இன்று 12 மணி நேரம் நீர் விநியோகம் தடைப்படும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

அதன்படி இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணி முதல் 12 மணி நேரம் களுத்துறை உள்ளிட்ட

04

திருகோணமலையில் ரயில் மோதி பெண் பலி

பொலிஸார் தீவிர விசாரணையில்

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்த ரயில் மோதியதில் பெண் ணொருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று (28) பதிவாகியுள்ளது.

திருகோணமலை பூம்புகார் பகுதியில் வசிக்கும் நான்கு பிள்ளைகளின் தாயான மேரி சாந்தி (47வயது) என்பவரே

04

டயானாவுக்கு எதிரான மனு 12இல் விசாரணை

நீதிமன்றில் ஆஜராகவும் உத்தரவு

இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, இராஜாங்க அமைச்சர் டயானா கமகே உள்ளிட்ட பிரதிவாதிகளை எதிர் வரும் டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி

04

ஏப்ரல் 21 தாக்குதல் சந்தேக நபர் கொலை!

மட்டக்குளியில் சம்பவம்

மட்டக்குளி பிரதேசத்தில் நபர் ஒருவர் கொடூரமான முறையில் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அந்தப் பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காரொன்றில் வந்த இருவர், இந்த படுகொலையை மேற்கொண்டுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

04

ஓமான், UAE யிலுள்ள

154 இலங்கையரை அழைத்துவர நடவடிக்கை

ஓமான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு பணிப்பெண்ணாகச் சென்றுள்ள 154 இலங்கையரை நாட்டுக்கு அழைத்துவர முதல் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

04

தெவட்டகஹ பள்ளிவாசலுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விஜயம்

பிரார்த்தனை நிகழ்வுகளிலும் பங்கேற்றார்

ருஸைக் பாரூக் , ஏ.எஸ்.எம். ஜாவிட்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவரது பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை (27) கொழும்பு ஷேக் உஸ்மான் வலியுல்லாஹ் தேவடகஹா பள்ளிவாசலுக்கு விஜயம் செய்தனர். பள்ளிவாசல் தலைவர் அல் ஹாஜ் ரியாஸ் சாலி மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதியையும் அவரது பாரியாரையும் வரவேற்றனர். புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, சூபி தரீக்காவின் சுப்ரிம் கவுன்ஸில் செயலாளர் முப்தி அல்ஆலிம் முஸ்தபா ராசா, கலாசார அமைச்சின் அதிகாரிகள் உட்பட பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில், அஸ்ஸெய்யித் அல்ஹாபிழ் கலாநிதி ஹஸன் மௌலானா விசேட பிரார்த்தனை நடாத்தினார். தெவடகஹா ஜும்ஆ பள்ளிவாசலின் தலைவர் அல்ஹாஜ் ரியாஸ் சாலி பள்ளிவாசல் சார்பாக நினைவுச் சின்னமொன்றையும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு வழங்கி வைத்தார். இவ்வைபவத்தில் இஸ்லாமிய கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மத்திய கிழக்கில் அமெரிக்கா செல்வாக்கு இழக்குமானால் அவ்விடத்தை சீனா கைப்பற்றும்

அமெரிக்காவுக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையே எண்ணெய் உற்பத்தி தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினை மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்காவின் செல்வாக்கு மந்த நிலையில் காணப்படுவதால் இவை இப்பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கு அதிகரிக்கவே உதவும் என மத்திய கிழக்கு அரசியல் அவதானிகள் ஆரூடம் தெரிவித்துள்ளனர்.

உக்ரைனுக்கு அமெரிக்கா ஆயுத உதவி செய்துவரும் அதேசமயம் ஈரான் ஆளில்லா ட்ரோன்களை ரஷ்யாவுக்கு விற்பனை செய்திருப்பதை சுட்டிக்காட்டும் இவர்கள், மத்திய கிழக்கு தொடர்பிலான தன் கொள்கைகளை அமெரிக்கா மறுபரிசீலனை செய்து தன் இழந்த செல்வாக்கை மீளப்பெற முயற்சிக்காவிட்டால் அமெரிக்கா விட்டுச் செல்லக்கூடிய இடத்தை ரஷ்யா, சீனா மற்றும் ஈரான் இட்டு நிரப்பக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதாக இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உலகளாவிய மசகு எண்ணெய் விலை வீழ்ச்சியைத் தடுக்கும் வகையில் ஒபெக் நாடுகள் தினமொன்றுக்கு தமது எண்ணெய் உற்பத்தியை 20 இலட்சம் பீப்பாய்களால் குறைப்பதற்கு சவூதி அரேபியா மேற்கொண்ட முயற்சியை அமெரிக்கா விரும்பவில்லை. இம்முடிவு அமெரிக்காவில் எண்ணெய் விலை அதிகரிப்பை ஏற்படுத்துவதோடு அந்நாட்டு பொருளாதாரத்திலும்

பாதிப்பு ஏற்படுத்தும் என்பதால் அமெரிக்கா தன் எதிர்ப்பை வெளியிட்டது. சவூதியின் மனித உரிமைகள் விவகாரம், ஈரானின் அணுசக்தித் திட்டம் என்பன தொடர்பிலும் அமெரிக்கா மாற்றுக் கருத்துகளைக் கொண்டிருக்கிறது.

அமெரிக்க பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம் கடந்த ஓகஸ்ட் மாதம் அமெரிக்க செல்வாக்கு தொடர்பாக ஒன்பது அரபு நாடுகளில் ஒரு கணிப்பை மேற்கொண்டது. இதில் மொரோக்கோ மட்டுமே சீனாவை விட அமெரிக்காவே சிறந்தது என்று சொல்ல, ஈராக், ஜோர்தான், லெபனான், லிபியா, மொரிடானியா, பாலஸ்தீனம், டூனீசியா மற்றும் சூடான் என்பன சீனாவே மேலானது என்ற கருத்தை பதிவு செய்திருந்தன.

மத்திய கிழக்கில் அமெரிக்காவின் எதிர்காலம் ஒரு நிச்சயமற்ற நிலையை நோக்கி நகர்வதையும், இப் பிராந்திய நாடுகள் அமெரிக்காவில் தங்கியிராத ஒரு நிலை நோக்கி செயற்படுவதையும் இது காட்டுவதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஐக்கிய அரபு குடியரசின் பொருளாதார வலயத்தில்

இந்திய முதலீடுகள் அதிகரிக்க வேண்டும் என்கிறார் பொறுப்பதிகாரி

ஐக்கிய அரபு குடியரசில் முதலீடு செய்வதற்கு இந்தியாவுக்கு நிறைய வாய்ப்புகள் காணப்படுவதால் இந்திய தொழிலதிபர்கள் அமீரகத்தில் முதலீடு செய்ய முன்வர வேண்டும் என அபுதாபி ராஸ் அல் கய்மா பொருளாதார வலயத்தின் குழும நிறைவேற்று அதிகாரியான ரமி ஜலாத் அழைப்பு விடுத்துள்ளார்.

2017 ஆம் ஆண்டு அபுதாபியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த பொருளாதார வலயத்தில் 14 ஆயிரம் பன்னாட்டு நிறுவனங்கள் முதலீடு செய்துள்ளன. நூறு உலக நாடுகளைச் சேர்ந்த 50 கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இங்கு இயங்கி வருகின்றன. கொவிட் பெருந்தொற்றின் பின்னர் புதிய கைத்தொழில் வளர்ச்சியை அவதானிக்க முடிவதாகவும் எனவே இந்திய முதலீட்டாளர்கள் அமீரகத்தில் முதலீடு செய்யும் அதே சமயம் அமீரகத்து முதலீட்டாளர்கள் இந்திய பொருளாதார வலயங்களிலும் முதலீடுகள் செய்ய முன்வரவேண்டும் என இவர் ஏ. என். ஐ. தகவல் ஊடகத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார்.

அமீரகத்தில் ஏராளமான இந்தியர்கள் வசிப்பதால் அவர்களின் பிள்ளைகள் இந்தியா சென்று கற்பதைவிட அமீரகத்திலேயே இந்தியக் கல்வியை கற்பிக்கும் பாடசாலைகளை ஆரம்பிக்கலாம் என்று யோசனை தெரிவித்திருக்கும் இவர், உயர்தர தொழில்நுட்பம், உற்பத்தித்துறை, வாழ்வியல் விஞ்ஞானம், மருந்து உற்பத்தி, கல்வி, பாடசாலை, ஆதன அபிவிருத்தி போன்ற துறைகளில் இந்திய வர்த்தகர்களுக்கு பிரகாசமான வாய்ப்பு இருப்பதாக அவர் இப்பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

சர்வதேச ஒத்துழைப்பில் இந்தியா புதிய ஒளி பாய்ச்சும்

டென்மார்க் தூதுவர் புகழாரம்

ஜி20 அமைப்பின் தலைவராக பொறுப்பேற்றிருக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் சர்வதேச ஒத்துழைப்புக்கு இந்தியா புதிய அளவுகோளை நிர்ணயிக்கும் என்றும் இந்திய தலைமைத்துவத்தின் மீது அதிகளவு நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கொண்டிருப்பதாகவும் இந்தியாவுக்கான டென்மார்க் தூதுவர் புகழாரம் சூட்டியுள்ளார்.

ஜி20 அமைப்பில் இந்தியாவின் தலைமைத்துவம் முக்கியமான மைல் கல்லாக அமையும் என நம்பிக்கை தெரிவித்துள்ள டென்மார்க் தூதுவர் பிறடி ஸ்வான், அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் இடையே இணைப்பொன்று இல்லாமல் எந்தவொரு நாடும் நீடித்திருக்க முடியாது என்பதை சுட்டிக்காட்டியதோடு இவ்வகையில் இந்தியத் தலைமை குறித்து தனக்கு எதிர்பார்ப்புகள் உள்ளதாகத் தெரிவித்தார்.

உக்ரைன் யுத்தம், உறுதித்தன்மையற்ற சூழல், உணவுப் பிரச்சினை, எரிசக்தி நெருக்கடி, மனிதநேய நெருக்கடி என உலகம் பல சவால்களை எதிர்கொண்டுள்ளது. எனினும் காந்திஜி முதல் இந்தியா பல நல் முன்னுதாரணங்களை கொண்டுள்ள நாடு என்ற வகையில் சர்வதேச ஒத்துழைப்பில் பிரதமர் மோடி நேர்மையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துவார். ஏனெனில் பழைய பாரம்பரியங்களை புதிய வாழ்க்கை முறைக்குள் புகுத்தக் கூடிய நாடு இந்தியா. இந்நாடு என்றைக்குமே ஏனைய நாடுகளை வெற்றி கொண்டதில்லை. அமைதியான நாடு என்ற வகையில் உலகத்துக்கு வழங்கக்கூடியவை அனேகம் என இந்தியாவை அவர் புகழ்ந்துரைத்துள்ளார்.

பிரண்டிக்ஸ் குழுமத்தினால் பல்கலைக்கழகம் தெரிவாகி வறுமை கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கும் அத்தோடு பிரண்டிக்ஸ் மாதிரி கிராமங்களில் வசிக்கும் வறுமைக்குட்பட்ட மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று பிரண்டிக்ஸ் வெலிசர நிலையத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரண்டிக்ஸ் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி யூசப் ஒமர், கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் எச்.டி.கருணாரத்ன மற்றும் பிரண்டிக்ஸ் நிர்வாக அதிகாரிகளும் கலந்து கொண்டனர். நிழ்வில் புலமைப் பரிசில் வழங்கப்பட்ட மாணவர்களும் பிரண்டிக்ஸ் குழும அதிகாரிகளும் எடுத்துக் கொண்ட படங்கள். படங்கள்: விமல் கருணாதிலக்க

கல்கமுவ எஸ்டா அல் குர்ஆன் மத்ரஸாவால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த பரிசளிப்பு விழா மத்ரஸா பணிப்பாளர் எம். இர்பான் தலைமையில் கல்கமுவ பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இவ்விழாவில் விஷேட பேச்சாளராக அஷ் ஷெய்க் யூ.கே. ரமீஸ் கலந்து கொண்டு உரையாற்றுவதையும் விழாவில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

மாவீரர் நாள் நினைவு கூரல் நிகழ்வுகள்;

தடைகள் ஏற்படுத்தாமை நல்லிணக்க சமிக்ஞையே

சபையில் செல்வம் MP வரவேற்று உரை

லோரன்ஸ் செல்வநாயகம்

வடக்கில் மாவீரர் தின நிகழ்வுகளை எத்தகைய நெருக்கடிகளும் இன்றி சுமுகமாக நடத்துவதற்கு இடமளித்தமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றி தெரிவிப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு எம். பிக்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் ஸ்ரீதரன் ஆகியோர் பாராளுமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வுகளுக்கு இடமளித்தமை நல்லிணக்கத்திற்கான சிறந்த சமிக்ஞையாக அமைந்ததாக செல்வம் அடைக்கலநாதன் எம். பியும் இது சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள புரிதலை வெளிப்படுத்துவதாகவும் அது மேலும் பலம் பெற வேண்டும் என்றும் ஸ்ரீதரன் எம் பியும் சபையில் தெரிவித்தனர்.

06

கிழக்கின் தனித்துவத்தைப் பாதுகாத்து வடக்கின் தலைவர்கள் முன்வைக்கும் தீர்வுக்கு ஆதரவு வழங்க தயார்

இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன்

லோரன்ஸ் செல்வநாயகம்

வடக்கின் தலைவர்கள் கிழக்கின் தனித்துவத்தையும் பாதுகாத்து உண்மையான இணக்கப்பாட்டோடு தெளிவான அரசியல் தீர்வு ஒன்றை முன்வைத்தால் அத்தகைய நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கத் தயாராக உள்ளதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கிழக்கு மக்களையும் இணையாக நடத்தக்கூடிய திட்டத்துடன் தெளிவான அரசியல் தீர்வோடு பயணிப்பதற்கான திட்டவரைபை அவர்கள் எமக்கு முன்வைத்தால் அவ்வாறான தீர்வு முயற்சிக்கு நாம் நிச்சயம் தடையாக இருக்க மாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.

நம்பிக்கை தரக்கூடிய தீர்வுகளை தெளிவான பார்வையோடு சிங்கள மக்களுக்கு நாம் முன் வைக்க வேண்டும்.

சிங்கள மக்களோடும் சிங்கள தலைவர்களோடும் பேச வேண்டுமெனக்கூறிக் கொண்டு கடந்த கால

06

மாணவர்களுக்கு இலவச "ஹெல்மட்"

நுவரெலியாவில் வழங்கி வைப்பு

'எமது பிள்ளைகள் பெறுமதியானவர்கள் ' என்ற தொனிப்பொருளின் கீழ் நுவரெலியா பிரதேசத்தின் தமிழ் ,சிங்களப் பாடசாலைகளுக்கு தலைக்கவசம் இன்றி செல்லும் மாணவர்களின் பெயர் விபரங்களைத் திரட்டி மாணவர்களின் நலன் கருதியும் , வீதி விபத்தில் பாடசாலை மாணவர்களின் உயிர்காக்கும் நோக்குடனும் அலியான்ஸ் காப் புறுதி நிறுவனம் மற்றும்

06

லிந்துலை சரஸ்வதி கல்லூரி; 17 மாணவர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகி காயம்

பிரதேச வைத்தியசாலையில் அனுமதி

ஹற்றன் சுழற்சி நிருபர்

நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட லிந்துலை சரஸ்வதி ரோயல் கல்லூரியின் மாணவர்கள் 17 பேர் நேற்று பிற்பகல் (28) குளவி கொட்டுக்கு இலக்காகிய நிலையில் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலையில் இருந்தவேளை அப்பகுதியில் இருந்த மரத்தில் காணப்பட்ட

06

ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயம்;

க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் அனைவரும் சிறந்த பெறுபேறு

95 பேருக்கு அனைத்து பாடங்களிலும் 'A' சித்தி

லோரன்ஸ் செல்வநாயகம்

ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தில் 2021 க.பொ.த சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றியுள்ள மாணவர்கள் அனைவரும் உயர்தரத்திற்கான தகைமையைப் பெற்றுக்கொண்டுள்ளதாக அந்த வித்தியாலயத்தின் அதிபர் கசுன் குணரத்ன தெரிவித்துள்ளார்.

முதல் தடவையாக பரீட்சைக்குத் தோற்றியுள்ள மாணவர்களில் 100% மானோர் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டுள்ளமை வித்தியாலயத்தின் குறுகிய கால வரலாற்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட பாரிய வெற்றியாகுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் தமது வித்தியாலயத்திலிருந்து 763 மாணவ , மாணவிகள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாகவும் அவர்களில் 95 பேர் 9 ஏ பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க 94 மாணவர்கள் 8 ஏ பெறுபேறுகளையும் 89 மாணவர்கள் 7 ஏ பெறுபேறுகளையும் 77 மாணவர்கள் 6 ஏ பெறுபேறுகளையும் 75 மாணவர்கள் 5 ஏ பெறுபேறுகளையும் பெற்றுக்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை க.பொ.த உயர்தரத்திற்காக அதிகளவு மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலையாகவும் பெருமளவிலானோர் சித்தியடைந்த பாடசாலையாகவும் இந்தப் பாடசாலை திகழ்கின்றது என்றும் ஆங்கில மொழியில் பரீட்சைக்குத் தோற்றிய 17 மாணவர்கள் 9 ஏ பெறுபேறுகளையும்

06

சேவைகளை விரிவுபடுத்தும் வெளிவிவகார அமைச்சு

தூதரக சேவைகள் யாவும் பரவலாக்கம்

பொதுமக்களுக்கு திறமையான சேவைகளை வழங்கும் நோக்கில் வெளிவிவகார அமைச்சு அமைச்சின் தூதரக சேவைகளை பரவலாக்குவதில் கவனம் செலுத்தி வருகிறது.

இதன்படி, தற்போதுள்ள பிராந்திய அலுவலகங்களுக்கு மேலதிகமாக, முக்கிய நகரங்களுக்கு சேவையை மேலும் பரவலாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது 2023 ஆம் ஆண்டின் செயற்திட்டத்தின் படி செயற்படுத்தப் படவுள்ளது.

வெளிவிவகார அமைச்சின் தூதரகப் பிரிவின் பணிப்பாளர் இதனை தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டில், அமைச்சின் தூதரக சேவையை பொது மக்களுக்கு மிகவும் நட்புறவான

06

எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி.

LB FINANCE 1971 - 2021

2011 ஆம் ஆண்டின் நிதி வணிகச் சட்டம் எண்.42 இன் பிரிவு 29(5) க்கு அமைவாக நிதிநிலை அறிக்கைகளை வெளியிடுதல்

30ம் திகதி செப்டெம்பர் மாதம் முடிவடைந்த காலத்திற்கான முக்கிய நிதித்தரவுகள் (கணக்காய்வு செய்யப்படாதது) ரூ. மில்லியன்	நிறுவனம் நடைமுறைக் காலம் 01.04.2022 இலிருந்து 30.09.2022 வரை	நிறுவனம் முன்னைய காலம் 01.04.2021 இலிருந்து 30.09.2021 வரை	குழுமம் நடைமுறைக் காலம் 01.04.2022 இலிருந்து 30.09.2022 வரை	குழுமம் முன்னைய காலம் 01.04.2021 இலிருந்து 30.09.2021 வரை
வட்டி வருமானம்	17,278	12,618	17,433	12,646
வட்டிச் செலவு	(8,129)	(4,277)	(8,155)	(4,285)
தேறிய வட்டி வருமானம்	**9,149**	**8,341**	**9,278**	**8,361**
ஏனைய வருமானம்	1,631	1,019	1,646	1,014
வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட இலாபம்/(நட்டம்)	3	(3)	3	(3)
தொழிற்பாட்டு செலவினங்கள் (பெறுமதி இழப்பு நீங்கலாக)	(3,423)	(2,938)	(3,550)	(2,975)
பெறுமதி இழப்பு	(439)	(760)	(404)	(703)
வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)	**6,921**	**5,659**	**6,973**	**5,694**
வரிகள்	(2,884)	(2,246)	(2,895)	(2,243)
வரிக்குப் பின்னரான இலாபம்/(நட்டம்)	**4,037**	**3,413**	**4,078**	**3,451**

30ம் திகதி செப்டெம்பர் மாதத்தில் உள்ளவாறான முக்கிய நிதித்தரவுகள் (கணக்காய்வு செய்யப்படாதது)	நிறுவனம் 30.09.2022 ரூ. (மில்லியன்)	நிறுவனம் 30.09.2021 ரூ. (மில்லியன்)	குழுமம் 30.09.2022 ரூ. (மில்லியன்)	குழுமம் 30.09.2021 ரூ. (மில்லியன்)
சொத்துக்கள்				
காக மற்றும் வங்கி மீதிகள்	6,314	11,653	6,406	11,856
தொடர்பான தரப்பினரிடமிருந்து வர வேண்டியவை	32	82	32	59
கடன்கள் (தொடர்பான தரப்பினரிடமிருந்து வரவேண்டியவை நீங்கலாக)	144,544	117,831	145,706	118,327
பங்குரிமை மூலதனத்திலுள்ள முதலீடுகள்	1,048	603	126	82
வங்கிகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் உடனான முதலீடுகள்	13,518	3,758	13,518	3,758
முதலீட்டு சொத்துக்கள்	-	-	71	-
ஆதனம், பொறி, உபகரணம்	8,510	8,537	8,662	8,549
ஏனைய சொத்துக்கள்	1,084	964	1,316	969
மொத்தச் சொத்துக்கள்	**175,050**	**143,428**	**175,837**	**143,600**
பொறுப்புக்கள்				
வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை	26,528	17,702	26,532	17,746
வாடிக்கையாளர்களிடமிருந்தான வைப்புக்கள்	100,542	84,222	100,879	84,285
ஏனைய கடன்கள்	8,402	6,153	8,402	6,153
ஏனைய பொறுப்புக்கள்	5,898	5,969	5,997	5,983
மொத்தப் பொறுப்புக்கள்	**141,370**	**114,046**	**141,810**	**114,167**
பங்குரிமை மூலதனம்				
கூறப்பட்ட மூலதனம்	838	838	838	838
நியதி ஒதுக்கு நிதியம்	8,319	8,366	8,319	8,366
நிறுத்தி வைத்த இலாபம்	24,577	20,270	24,538	20,354
ஏனைய ஒதுக்குகள்	(54)	(92)	231	(125)
நிறுவனத்தின் சம பங்குதாரர்களுக்கான மொத்த பங்குக் காரணிகள்	**33,680**	**29,383**	**33,926**	**29,433**
கட்டுப்படுத்தமுடியாத உரிமைகள்	-	-	101	-
மொத்த மூலதனம்	**33,680**	**29,382**	**34,027**	**29,433**
மொத்த பொறுப்புக்களும் பங்குரிமை மூலதனமும்	**175,050**	**143,428**	**175,837**	**143,600**
பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி (ரூ.)	**60.79**	**53.03**	**61.23**	**53.12**

தெரிவுசெய்யப்பட்ட முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் வகை	நிறுவனம் 30.09.2022 தேவையானது	நிறுவனம் 30.09.2022 உண்மை	நிறுவனம் 30.09.2021 தேவையானது	நிறுவனம் 30.09.2021 உண்மை
ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனப் போதுமை (%)				
அடுக்கு 1 மூலதன போதுமை விகிதம்	10.00%	23.84%	8.00%	21.48%
மொத்த மூலதன போதுமை விகிதம்	14.00%	24.81%	12.00%	22.94%
வைப்பு பொறுப்புக்களுக்கான மூலதன நிதிய விகிதம்	10.00%	33.50%	10.00%	34.89%
கடன் சொத்துப்பட்டியலின் தரம் (%)				
மொத்தச் செயற்படாக் கடன்களின் விகிதம்		4.81%		6.65%
தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம்		-0.33%		0.88%
மைய மூலதன விகிதத்திற்கான தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம்		-1.73%		4.30%
ஒதுக்கு பாதுகாப்பு விகிதம்		106.89%		86.81%
இலாபத்தன்மை (%)				
தேறிய வட்டி இலாபம்		11.59%		12.76%
சொத்துக்கள் மீதான வருமானம்		4.76%		4.81%
பங்குரிமை மூலதனம் மீதான வருமானம்		24.20%		23.23%
வருமானத்திற்கான செலவு விகிதம்		31.74%		31.40%
திரவத்தன்மை (%)				
தேவையான திரவச் சொத்துகளுக்கான கிடைக்கத்தக்க திரவச் சொத்து (குறைந்தபட்சம் 100%)		155.94%		165.64%
வெளிவாரி நிதியத்திற்கான திரவச் சொத்துக்கள்		12.21%		13.73%
விஞ்ஞாபனத் தகவல்கள்				
கிளைகளின் எண்ணிக்கை		188		173
வெளிவாரி கொடுகடன் தரமிடல் (Fitch Ratings)		A- lka		A- lka

இந்த நிருவனத்திற்கு 30ம் திகதி செப்டம்பர் மாதம் 2022 மற்றும் 2021 களில் வைப்புக்கள் கடன் பெறுதல் மற்றும் கடன் கொடுத்தல்கள் மீது எந்த விதமான சட்டரீதியான தண்ட பணம் செலுத்துகைகளோ அல்லது வரையறைகளோ இல்லை

உறுதிப்படுத்தல்:

எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி. இன் நிர்வாக இயக்குனர், தலைமை நிதி அதிகாரி மற்றும் இணக்க அலுவலர் ஆகிய நாங்கள் கூட்டாக பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றோம்.

(அ) மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இக்கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்டவை எனக்குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி. இன் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து எடுக்கப்பட்டவை.

(ஒப்பமிடப்பட்டது)
ஜே. ஏ. எஸ். சுமித் ஆதிஹெட்டி
நிர்வாக இயக்குனர்
19 அக்டோபர் 2022

(ஒப்பமிடப்பட்டது)
மலித் ஹேவகே
தலைமை நிதி அதிகாரி
19 அக்டோபர் 2022

(ஒப்பமிடப்பட்டது)
வருண பெரேரா
இணக்க அலுவலர்
19 அக்டோபர் 2022

LB FINANCE

எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி., 275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. | துரித அழைப்பு : 0112 200 000 | www.lbfinance.com | LB Finance PLC

• ஃபிட்ச் மதிப்பீடுகளால் A- lka (RWN).

• CA ஸ்ரீலங்காவின் வருடாந்த அறிக்கை விருதுகளில் தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக ஒட்டு மொத்த சிறப்பினருக்கான வெண்கல விருது மற்றும் நிதி மற்றும் குத்தகைத் துறையில் தொடர்ந்து நான்காவது வருடமாக தங்க விருது வழங்கப்பட்டது.

• CMA இலங்கை வருடாந்த அறிக்கை - 2021 விருதுகளில் ஒட்டு மொத்த சிறப்பினருக்கான தங்க விருது வழங்கப்பட்டது.

வடக்கின் தலைவர்கள்... (03 ஆம் பக்கத் தொடர்)

கசப்பான அனுபவங்கள் அதனூடான வெறுப்புக்களை வெளியிட்டு வருவதை தவிர்க்க வேண்டும்.

அத்துடன் மோசமான வார்த்தைகளினால் உணர்வுகளைத் தட்டி எழுப்பிப் பேசி சிங்களமக்கள் மத்தியில் காயங்களை ஏற்படுத்தவும் கூடாது.

தென்பகுதியின் எழுச்சிக்கு முகம் கொடுக்கக்கூடிய சூழலை உருவாக்க வேண்டுமென்றால் இப்போதிருக்கின்ற நிலையிலிருந்து விடுபட்டு மாற்று சிந்தனையை பரிசீலிப்பதற்கு தயாராக உள்ளதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் ஊடகத்துறை, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெளிவிவகார அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுப்பதாக தமிழரசுக்கட்சி தெரிவித்தது. ஆனால் எதிலும் வெளிப்படைத்தன்மை கிடையாது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்ததைப் போன்று 13 பிளஸ்ஸிலிருந்து தான் பேச்சுவார்த்தையில் ஆரம்பிக்கப் போகின்றோமா?

அவ்வாறானால் அது தொடர்பில் கட்சிகள் மத்தியில் கருத்தொற்றுமை காணப்படுகின்றதா? அல்லது வைரமுத்து சொன்னதுபோல் பட்டு வேட்டி கனவில் இருக்கின்ற போது கட்டியிருக்கின்ற கோவணமும் களவாடப்பட்ட கதையாக ப்போகப் போகின்றதா? அறிய முடியவில்லை.

மாணவர்களுக்கு ... (03 ஆம் பக்கத் தொடர்)

பொலிஸாரின் ஆதரவுடன் தலைக்கவசத்தின் பயன்பாடு மற்றும் தலைக்கவசம் குறித்த விழிப்புணர்வுகளையும் மாணவர்களுக்கு வழங்கியது. நுவரெலியா பொலிஸ் நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நுவரெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி , பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி இணைந்து மாணவர்களுக்கு இலவசமாக தலைக்கவசங்களை வழங்கினர்.

நாடளாவிய ரீதியில் சமூக வேலைத் திட்டமாக அலியான்ஸ் காப்புறுதி நிறுவனம் தலைக்கவசம் விநியோகம் செய்துவருகின்றமை குறிப்பிடத் தக்கது.

லிந்துலை சரஸ்வதி... (03 ஆம் பக்கத் தொடர்)

குளவிக்கூடே இவ்வாறு கலைந்து வந்து மாணவர்களை கொட்டியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்போது குளவி கொட்டுக்கு இலக்கான மாணவர்கள் ஆரம்ப பிரிவைச் சேர்ந்த ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் என பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

குளவி கொட்டுக்கு இலக்கான மாணவர்கள் தொடர்ந்தும் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

க.பொ.த சாதாரண... (03 ஆம் பக்கத் தொடர்)

18 மாணவர்கள் 8 ஏ பெறுபேறுகளையும் 16 மாணவர்கள் 7 ஏ பெறுபேறுகளையும் மற்றும் 7 பேர் 6 ஏ பெறுபேறுகளையும் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சேவைகளை விரிவுபடுத்தும்... (03 ஆம் பக்கத் தொடர்)

சேவையாக மாற்றும் நோக்கில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 2023 ஆம் ஆண்டு ஒவ்வொரு அமைச்சின் செயற்பாட்டுத் திட்டங்கள் குறித்து ஊடகங்களுக்கு அறிவிப்பதற்காக வெகுஜன ஊடக அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலாபமீட்டும் நிறுவனமாக...

கொண்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின்போது காலி மாவட்ட எம்பி ஷான் விஜேலால் எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஊடக நிறுவனங்களுக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. சுயமாக நிதி வருமானத்தை பெற்றுக் கொள்ளும் நிறுவனமாக அவை இயங்குவதால்

அவற்றிற்கு அரசாங்கம் தலையீடு செய்வது சிறந்தது அல்ல.அந்த வகையில் அரச ஊடகம் தனியார் ஊடகம் என இரண்டிற்குமே சமநிலை வழங்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியினருக்கும் அவர்களது கருத்துக்களை வெளியிடுவதற்கு அதிக காலம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் ஊடக நிறுவனங்கள் கடந்த காலங்களில் நட்டம் ஏற்படுவதற்கு அதிகளவு ஊழியர்களும் கொரோனா வைரஸ் பரவல் சூழ்நிலையுமே காரணமாகும். நாட்டின் சூழ்நிலை காரணமாகவே நிறுவனங்கள் நட்டம் ஈட்டுகின்றன. ஊடகவியலாளர்களின் நலன்புரி விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அவர்களது காப்புறுதி தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டு வருகிறது.

அரச மற்றும் தனியார் ஊடகங்களுக்கு அரசாங்கம் என்ற வகையிலும் எத்தகைய அழுத்தங்களையும் பிரயோகிப்பதில்லை.

அந்த வகையில்அரசாங்கத்தின் அழுத்தங்கள் காரணமாக அரச ஊடகங்கள் பலவீனப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் கூற்றை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது .அவற்றுக்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை தனியார் ஊடகம் அரச ஊடகம் என பாரபட்சமின்றி அனைத்திற்கும் சமமான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச ஊடகவியலாளர்களும் பாரிய பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகிறார்கள். அவர்களது அடையாள அட்டை மற்றும் அவர்களுக்கான உபகரணங்களை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மஹவ யாழ் ரயில் சேவை...

மஹவயில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் ரயில் ஜனவரி 15ஆம் திகதி முதல் ஐந்து மாதங்களுக்கு நிறுத்தப்பட வேண்டும். ரயில் பாதையை சீரமைக்க வேண்டி இருப்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் 5 மாதங்களின் பின்னர் யாழ்ப்பாணத்திற்கு நல்ல ரயில் சேவையை வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

சாரதி அனுமதிப்பத்திர...

அவரது ஓட்டுநர் உரிமம் ரத்துச் செய்யப்படும். மேலும் அவர், அவள் மீண்டும் சாரதி அனுமதி பாத்திரத்தை பெற்றுக்கொள்ள பரீட்சை மற்றும் பயிற்சி மூலம் உரிமத்தை மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

புதிய முறையின் கீழ், பொலிஸ், நீதிமன்றங்களில் , சம்பவ இடத்திலோ அல்லது தபால் நிலையத்திலோ அபராத தொகையை ஒன்லைனில் செலுத்தலாம் என்று அமைச்சர் லசந்த அழகியவண்ண கூறினார்.

ஊடக சுதந்திரத்திற்கு எதிராக...

விளைவுகளுக்கு வரலாற்றில் பல சம்பவங்களை சான்றாக

குறிப்பிட முடியும்.

நாட்டின் நற்பெயர் தொடர்பில் சர்வதேசத்தின் மத்தியில் தவறான தக வல்கள் பரப்பப்படுகின்றன. ஒருசில ஊடகங்கள் ஊடகவியலின் அடிப் படை நெறிமுறைகள் மற்றும் ஊடக ஒழுக்கவியலுக்கு எதிராக செயற்படு வதையே அவதானிக்க முடிகிறது.

நாட்டின் பொருளாதாரத்திலும் முன்னேற்றத்திலும் ஊடகங்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன. அந்த வகையில் ஊடகங்கள் தாய் நாட்டுக்காக பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

சமூக ஊடகங்களை கண்காணிக்கும் வகையிலான சட்டமொன்றை கொண்டு வருவது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

கொழும்பில் இன்று...

பல பகுதிகளுக்கு நீர் விநியோகம் தடைப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய வாதுவ, வஸ்கடுவ, பொதுப்பிட்டிய, மொரந்துடுவ, களுத்துறை வடக்கு மற்றும் தெற்கு, கட்டுகுருந்த, நாகொட உள்ளிட்ட பகுதிகளுக்கு நீர் விநியோகம் தடைப்படும் என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

திருகோணமலையில்...

இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது. விபத்துக்கான காரணம் தொடர்பில் திருகோணமலை தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

டயானாவுக்கு எதிரான...

நீதிமன்றில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பிரதிவாதியான டயானா கமகேவின் குடியுரிமை தொடர்பான அனைத்து ஆவணங்களையும் நீதி மன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவை பிறப்பித்தது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய குழு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

ஏப்ரல் 21 தாக்குதல்...

உயிரிழந்த நபர் ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட ஒருவரென தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விளக்கமளித்து பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டு வெளிநாடு சென்றிருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ அண்மையில் நாடு திரும்பினார்.

அவர் நாடு திரும்பியதற்குரிய விமான நிலைய செயற்பாடுகள் தொடர்பில் போலியான தகவல்கள் வெளியிடப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. பஷில் ராஜபக்ஷ சட்ட ரீதியாகவே விமான நிலைய வளாகத்தைப் பயன்படுத்தியிருக்கின்றார். சிவில் விமான சேவைகள் நிறுவனத்தின் ஆவணங்களுக்கமைய இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பஷில் ராஜபக்ஷ தனது மனைவியுடன் விமான நிலையத்தின் முக்கிய பிரமுகர்கள் நுழைவாயிலைப் பயன்படுத்தியுள்ளதோடு , அதற்காக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்திற்கு 400 டொலர் கட்டணத்தையும் செலுத்தியுள்ளார்.

விமான நிலைத்திற்கு செல்லும் போதும் அங்கிருந்து வெளியேறும் போதும் எந்தவொரு நபருக்கும் கட்டணத்தை செலுத்தி , முக்கிய பிரமுகர்கள் நுழைவாயிலைப் பயன்படுத்த முடியும் என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். எனவே அவர் கட்டணத்தை செலுத்தி அந்த நுழைவாயிலைப் பயன்படுத்தியமை எந்தவகையிலும் சட்டத்திற்கு முரணான செயல் அல்ல.

154 இலங்கையரை...

தெரிவித்துள்ளது.

இவர்களில் பெரும்பாலானோர் சுற்றுலா விசாவில் வெளிநாடு சென்றுள்ளதாகவும் அவர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு தேவையான அமைச்சரவை அனுமதியை அமைச்சர் பெற்றுள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பயிற்சி மற்றும் ஆட்சேர்ப்பு பிரிவின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அலி சப்ரி இன்று...

கவனம் இங்கு ஈர்க்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் விஜயத்தின் போது சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றுக்கு இடையிலான கலந்துரையாடல்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

மக்கள் வங்கி

பார்க் வீதி கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின்கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின்கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2022 ஒக்டோபர் 28 ஆந்தேதி நடைபெற்ற அதனது கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் முறையாகக் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், PV 483 எனும் பதிவிலக்கத்தைக்கொண்டதும், இல. 115, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு 02 எனும் முகவரியில் அதனது பதிவுபெற்ற அலுவலகத்தைக் கொண்டுள்ளதுமான நவலோக கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (பிறைவேட் லிமிட்டட் நிறுவனமானது கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பிரியந்தி லியனகே என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017 ஏப்பிரல் 25 ஆந்தேதிய 7452 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ப.பள்யூ. ரி.ஐ. அம்பேபிட்டிய என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2021 பெப்ரவரி 01 ஆந்தேதிய 623 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதாதலால், சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள் மீதான மேலதிக வட்டியுடன் சேர்த்து **ஒரு பில்லியன் இருநூற்றி நான்கு மில்லியன் ஏழு இலட்சத்து மூவாயிரத்து நானூற்றி முப்பத்தெட்டு ரூபா ஆறு சதம் (ரூபா. 1,204,703,438.06)** பணத்தொகை இப்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ளது.

2022.09.21 ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை **நானூற்றி எண்பத்திரெண்டு மில்லியன் ரூபா (ரூபா. 482,000,000.00) பணத்தொகைமீது ஆண்டுக்கு AWPLR+3.5% எனும் வீதத்திலான மேலதிக வட்டியுடன் சேர்த்தும்,** மற்றும் 2022.09.21 ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை **POD ஐந்நூற்றிமூன்று மில்லியன் முப்பத்து மூவாயிரத்து நானூற்றி எண்பது ரூபா மூன்று சதம் (ரூபா. 503,033,480.03) பணத்தொகைமீது ஆண்டுக்கு AWPLR+3.5% எனும் வீதத்திலான மேலதிக வட்டியுடன் சேர்த்தும்,** மேற்சொல்லப்பட்ட **ஒரு பில்லியன் இருநூற்றி நான்கு மில்லியன் ஏழு இலட்சத்து மூவாயிரத்து நானூற்றி முப்பத்தெட்டு ரூபா ஆறு சதமாகவுள்ள (ரூபா.1,204,703,438.06)** மொத்தப் பணத்தொகையையும், அத்துடன் பெறப்பட்டதிலிருந்தான கொடுப்பனவு (ஏதேனும் செய்திருப்பின்) அதனையும் கழித்த பின்னர், சொல்லப்பட்ட மக்கள் வங்கிச் சட்டப் பிரிவின்கீழ் (29L), அறவிடப்படத்தக்க செலவுதொகைகளையும் பணங்களையும் அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் மேலும் விபரமாக விபரிக்கப்பட்டுள்ளதும், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பிரியந்தி லியனகே என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017 ஏப்ரல் 25 ஆந் திகதிய 7452 ஆம் இலக்க மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிமூலமும் மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ப.பள்யூ.ரி.ஐ. அம்பேபிட்டிய என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2021 பெப்ரவரி 01 ஆந்தேதிய 623 ஆம் இலக்க மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிமூலமும், சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உரிமம்பெற்ற ஏலதாரர் திருமதி. ஈ.எஸ். இராமநாயக்க என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை, 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கி சட்டத்தினால் அவர்களுக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.

மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அம்பத்தலேன் பகல அளுத் குரு கோரளே தெற்கு, கொலன்னாவ நகரசபை எல்லைகளினுள்ளும், கொலன்னாவ பிரதேச செயலாளர் பிரிவினுள்ளும் வருகின்ற இல. 510B குருணியாவத்த கிராம அலுவலர் பிரிவினுள், 3 ஆம் இலக்க வட்டாரத்தில் வெல்லம்பிட்டியவில் அவிசாவெல வீதி நெடுக்கிலும் அமைந்துள்ள அவிசாவெல வீதியில் (லோலெவல் வீதி) 55 ஆம் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்டுள்ளதும், அதன்மேலுள்ள மண், மரங்கள், பயிர்கள், கட்டிடம் மற்றும் எல்லாவற்றையும் சேர்த்து, **குரேணியாவத்த** மற்றும் **கும்புற**, மறுபெயர், **குருணியாவத்த** மற்றும் **கும்புற** எனவழைக்கப்படுவதும் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். விக்கிரமசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007.01.26 ஆந் திகதிய 9458 ஆம் இலக்க வரைப்படத்தில் காணித்துண்டம் A என குறித்துக்காட்டப்பட்டு அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் சொல்லப்பட்ட காணித்துண்டம் A பின்வரும் எல்லைகளை உடையது - வடக்கு: கித்தம்பஹுவ கால்வாய் கிழக்கு: வீதி (P.P.Co. 6279 இல் உள்ள காணித்துண்டம் 12) தெற்கு: இதன் காணித்துண்டம் B மற்றும் மேற்கு: அவிசாவெல வீதியில் 53 ஆம் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்டுள்ள வளவு, அத்துடன் பரப்பளவில் இது, முப்பத்தெட்டு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுக்களைக் (00ஏ. 00றூ. 38.50பே.) கொண்டுள்ளது.

மேற்சொல்லப்பட்ட வெல்லம்பிட்டியவில் அமைந்துள்ளதும், குரேணியாவத்த மற்றும் கும்புற, மறுபெயர், குருணியாவத்த மற்றும் கும்புர என அழைக்கப்படும் உரிமம் பெற் நில அளவையாளர் எஸ். விக்கிரமசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007.01.26 ஆந் தேதிய 9458 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் B என குறித்துக்காட்டப்பட்டு அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் சொல்லப்பட்ட காணித்துண்டம் B பின்வரும் எல்லைகளை உடையது வடக்கு: கித்தம்பஹுவ கால்வாய் கிழக்கு: நில அளவை வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 2 இற்குரிய (P.P. Co. 6279 இலுள்ள காணித்துண்டம் 12) வீதி தெற்கு: 5/89 ஆம் இலக்க நில அளவை வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 2 இற்குரிய (P.P.Co 6279 இலுள்ள காணித்துண்டம் 12) வீதி மற்றும் அவிசாவெல வீதி (லோலெவல் வீதி) மேற்கு: அவிசாவெல வீதி (லோலெவல் வீதி) மற்றும் அவிசாவெல வீதியில் (லோலெவல் வீதி) 53 ஆம் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்டுள்ள வளவு, அத்துடன் சொல்லப்பட்ட 7053 ஆம் இலக்க வரைபடத்துக்கிணங்க பரப்பளவில் இது, நான்கு ஏக்கர், மூன்று றூட் மற்றும் ஏழு பேர்ச்சுக்களைக் (04ஏ. 03றூ.07பே.) கொண்டுள்ளதுடன் கொழும்பு காணிப் பதிவகத்தில் உரித்து F72/32 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டும் உள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிராந்திய முகாமையாளர் (கொழும்பு தெற்கு)
மக்கள் வங்கி,
1 ஆவது மாடி,
இல. 11, டியுக் வீதி,
கொழும்பு 01

மக்கள் வங்கி PEOPLE'S BANK

Facebook களியாட்ட...

மற்றும் போதை மாத்திரைகளை வைத்திருந்த 08 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிகம பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் (27) அதிகாலை இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 20 மற்றும் 30 வயதுக்கு இடைப்பட்ட வெலிகம, ரணல, திஸ்ஸமஹாராமய, கனங்கே, தெலிஜ்ஜவில, வன்சாவல மற்றும் பெலியத்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடைகள் ஏற்படுத்தாமை... (03 ஆம் பக்கத் தொடர்)

சில இடங்களில் சில சில தடைகள் இடம் பெற்ற போதும் பொதுவாக அந்த நிகழ்வுகள் மக்களின் பங்கேற்புடன் நடைபெற்றன என்பதை சபையில் சுட்டிக்காட்டிய செல்வம் அடைக்கலநாதன் எம்பி ,அதற்கு இடமளித்ததன்மூலம் ஜனாதிபதி நல்லிணக்கத்திற்கான சமிக்ஞையை வெளியிட்டுள்ளமைக்கு நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார். ஊடகத்துறை, போக்குவரத்து, வெளிவிவகாரம் மற்றும் நெடுஞ்சாலைகள்,அமைச்சுக்களுக்கானவரவுசெலவுத்திட்டநிதிஒதுக்கீட்டுகுழுநிலைவிவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், மக்கள்தாம்நினைவுகூரும்போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் மக்கள் பங்கேற்புடன் நடைபெற்றன. இந்த விடயத்தில் நல்லிணக்க சமிக்ஞையாக ஜனாதிபதி செயற்பட்டமை வரவேற்கத்தக்கது.

ஐக்கிய அரபு இராச்சிய...

இலங்கையில் மீள்முதலீட்டை ஊக்குவிக்கும் வகையில் முதலீடு செய்ய தாம் ஆர்வமாக உள்ளதாக அவர் கூறினார். இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் முதலீடுகள் குறித்து கலந்துரையாடுவதற்காக பிரதமர் தினேஷ் குணவர்தனவை பிரதமர் அலுவலகத்தில் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

திருகோணமலைக்கு மேலும்...

உப பிரதேச செயலகமாக இயங்கி வரும் தோப்பூர் உப பிரதேச செயலகத்தினை பிரதேச செயலகமாக தரமுயர்த்துவதுடன், கிண்ணியா பிரதேச செயலக பிரிவில் கிண்ணியா பிரதேச சபையினை உள்ளடக்கிய பகுதியினை தனியான பிரதேச செயலக பிரிவாகவும் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை பகுதியில் ஒரு பிரதேச செயலக பிரிவும் புதிதாக உருவாக்கப்பட வேண்டும்.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண கபைகள் உள்ளூராட்சி, விளையாட்டுத்துறை அமைச்சின் குழுநிலை விவாதத்தில் பாராளுமன்றில் உரையாற்றும் போதே திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

மேலும், திருகோணமலை மாவட்டத்தில் 11 பிரதேச செயலக பிரிவுகளும், தோப்பூர் உப பிரதேச செயலக பிரிவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் புதிய பிரதேச செயலகங்களை உருவாக்குவதற்காக இதுவரை ஐந்து எல்லை நிர்ணய ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன அவை அனைத்திலும் தோப்பூர் தனி பிரதேச செயலகத்திற்கான கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

தோப்பூர் உப பிரதேச செயலகம் உருவாக்கப்பட்ட பின்னர் நாட்டில் இரண்டு முறை புதிய பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதில் தோப்பூர் உள்ளடக்கப்படவில்லை என்பதனை வேதனையுடன் இச்சபையில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இத்தனைக்கும் தோப்பூர் என்பது மிகப்பழமையான பிரதேசம் ஆகும்.

பழமையான பிரதேசம் இன்னும் உப பிரதேச செயலகமாகவே இருந்து வருகின்றது. இதற்கு பின்னர் உருவாக்கப்பட்ட பல பிரதேசங்கள் தனி பிரதேச செயலகங்களாக மாறியுள்ளன என்பதனையும் இங்கே கூறிக் கொள்ள விரும்புவதாகவும் அவர் தனது உரையில் தெரிவித்தார்.

ஐ.நா தலைமையகத்தில்...

இந்த சிலை திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த சிலை திறப்பு விழாவில் ஐ.நா. பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரெஸ் மற்றும் பாதுகாப்பு துறையின் 15 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேசத்தந்தை மகாத்மாவின் இந்த சிலையை புகழ்பெற்ற சிற்பியும், பத்மஸ்ரீ விருது பெற்றவருமான ராம் சுதர் வடிவமைத்துள்ளார்.

இதன் மூலம் ஐ.நா. தலைமையகத்தில் முதல் முறையாக மகாத்மா காந்தி சிலை இடம்பெறுகிறது.

முன்னதாக கடந்த 1982ம் ஆண்டு சூரிய கடவுளின் சிலை ஒன்றை இந்தியா ஐ.நா.வுக்கு பரிசளித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

காணாமல் போன மீனவர்கள்...

கிடைத்துள்ளதாக மீனவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

அந்தமான் தீவிலிருந்து தமது தொலைபேசிக்கு அழைப்பொன்று வந்ததாகவும் அதில், மீனவர்கள் படகுடன் மீட்கப்பட்டு தற்போது கடல் பாதுகாப்பு படையின் பாதுகாப்பில் இருப்பதாகவும் தமக்கு தகவல் கிடைத்ததாக காணாமல் போன மீனவர் உமர்தீன் அசன் அலி என்பவரின் மகன் முஜாஹித் தெரிவித்தார்.

குறித்த தகவல் தொடர்பில், மீனவர் சங்கம் மற்றும் துறைமுக அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாகவும் முஜாஹித் மேலும் தெரிவித்தார்.

புலம்பெயர் அமைப்புக்களின்...

வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சில புலம்பெயர் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டுள்ள நிலையில் அவை சாத்தியமானதாக அமைந்துள்ளதாகவும் சபையில் தெரிவித்த அவர், ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து மேற்படி அலுவலகத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற போக்குவரத்து, ஊடகத்துறை, நெடுஞ்சாலைகள், மற்றும் வெளிவிவகார அமைச்சுக்களுக்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாட்டில் யுத்தம் முடிவுற்று பல ஆண்டுகள் கடந்துள்ள போதும் எம்மால் இன்னும் முழுமையான சமாதானத்தைக் கட்டியெழுப்ப முடியாமல் போயுள்ளது.

அதற்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இல்லாதொழித்து புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.அதே வேளை நீண்ட காலம் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த தமிழ் அரசியல் கைதிகள் பலரை விடுவிக்கவும் முடிந்துள்ளது.

20 லட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் வெளிநாடுகளில் வசிக்கின்றனர். அவர்களில் தமிழ் மக்கள் பெரும்பாலானோர் காணப்படுகின்றனர்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தின் கீழ் அவர்கள் மூலம் பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

அவர்களுடன் நான் இணைப்பை முறையாக முன்னெடுக்கும் வகையில் சர்வதேச தொடர்

வட பகுதி மக்களின் மேம்பாட்டுக்கான சட்டதிட்டங்களை செயற்படுத்துவேன்

கோப்பாய் குறூப் நிருபர்

வடக்கு மக்களுக்கான அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு உரிய சட்ட திட்டங்களை செயல்படுத்துவேன் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

ஆளுநர் செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, ஆளுநர் தான் நினைத்தபடி நியதிச்சட்டங்களை உருவாக்கி வர்த்தமானி வெளியிட்டுள்ளனர் என சிலர் கூறிகொண்டு தம்மை மக்கள் மத்தியில் தலைவர்களாகக் காட்ட முயல்கின்றனர்.

வட மாகாண சபை செயற்பாட்டில் மக்கள் நலன் சார்ந்த பல நியதிச்சட்டங்கள் ஏற்கனவே உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்படாமல் உள்ளது.

ஆளுநரின் அதிகாரத்தின் கீழ் மாகாண சபையொன்றுக்கு நியதிகளை இயற்றும் அதிகாரம் அவற்றிலுள்ள விடயங்கள் தொடர்பான நிறைவேற்று அதிகாரம் அந்த மாகாண சபை ஸ்தாபிக்கப்பட்ட மாகாண ஆளுநரால் நேரடியாகவோ அல்லது அமைச்சர்கள் சபையின் அமைச்சர்கள் மூலமாகவோ அல்லது கீழ்நிலை அதிகாரிகள் மூலமாகவோ செயற்படுத்தப்படும்.

பிரிவு 154F அதைத்தான் அரசியலமைப்புச் சட்டம் சொல்கின்றது. ஒவ்வொரு சட்டமும் மாகாண நிர்வாகத்தின் மூலம் செயற்படுத்தப்படுகிறது.

அரசியலமைப்பில் எழுதப்பட்ட மாகாண அதிகாரங்கள் பல தமது செயற்பாடுகளை செய்யாமல் இருப்பதால் அவை ஒவ்வொன்றாகச் சரிபார்க்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

நிர்வாக ரீதியாகவும் இடைவெளிகள் உள்ளதோடு அதிபர் ஆசிரியர்களின் இடமாற்றங்கள் யாழ்ப்பாணத்திற்கு சாதகமான கொள்கையைக் கொண்டிருந்தன.

கடந்த காலங்களில் மாகாண அரச சேவை சகல மக்களுக்கும் சென்றடையும் வகையில் இலகுபடுத்தப்பட்டுள்ளது.

ஆகவே ஆளுநர் என்ற வகையில் வடக்கு மக்களுக்கான அபிவிருத்திகளை மேற்கொள்ள உரிய சட்ட திட்டங்களை செயல்படுத்துவேன். யாரும் எனக்கு கற்பிக்க வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

தபாலக ஊழியர் மீது தாக்குதல் விசாரணைகள் முன்னெடுப்பு

யாழ்.நிருபர்

யாழ்ப்பாண தபாலக ஊழியரொருவர் மீது யாழ்.போதனா வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து தாக்குதல் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இதில் காயமடைந்த தபாலக ஊழியர் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தற்சமயம் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தாக்குதல் சம்பவம் குறித்து யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

அதேவேளை சம்பவம் தொடர்பில் தாக்குதலுக்கு இலக்கான நபர், யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதனைதொடர்ந்து இரு தரப்பினரிடமும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தமது தாயாரை பார்ப்பதற்காக தாக்குதலுக்கு இலக்கானவரும், மற்றுமொருவரும் வைத்தியசாலைக்கு சென்றுள்ளனர்.

இதன்போது ஒருவர் மட்டுமே வைத்தியசாலை விடுதிக்குள் சென்று நோயாளரை பார்வையிட முடியுமென பாதுகாப்பு உத்தியோகத்தரினால் தெரிவிக்கப்பட்டதால் இருதரப்பினரிடையேயும் வாக்குவாதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைதொடர்ந்து வாக்குவாதம் முற்றி தாக்குதலில் முடிந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

காரைநகரில் பொதுமக்களின் காணிகளை அபகரிக்க முயற்சி

மக்கள் எதிர்ப்பு

காரைநகர் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஜே/44 கிராம சேவகர் பிரிவிலுள்ள பொதுமக்களின் காணிகளை இராணுவத்திற்கு அளவிடுவதற்கு அப்பகுதி மக்கள் நேற்றைய தினம் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இப்பகுதியில் 44 குடும்பங்களுக்கு சொந்தமான 11 ஏக்கர் காணி காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். மக்களின் எதிர்ப்பையடுத்து காணியை அளவிடுவதற்கு வந்த நில அளவை திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர்.

இது தொடர்பில் அப்பகுதி மக்கள் தெரிவிக்கையில்,

நாங்கள் சொந்த காணிகள் இல்லாமல் வாடகை வீடுகளில் இருந்து சிரமப்படுகிறோம். எங்களது நிலையை கருத்தில் கொள்ளாது இராணுவத்தினருக்கு காணி அளவிடுவதற்கு முயற்சிக்கின்றனர். இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அண்மையில் வடக்கு ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், மக்களது காணிகளை மக்களுக்கே வழங்குவதாக ஆளுநர் குறிப்பிட்டிருந்தார். இது இவ்வாறிருக்க நிலஅளவை திணைக்களத்தினர் நேற்றையதினமும் காணி அளவீட்டிற்கு வருகைதந்திருக்கின்றனர்.

காரைநகர் பிரதேச செயலகம் தமக்கு காணி அளவிடுமாறு அறிவித்தல் வழங்கியமையாலேயே தாங்கள் காணி அளவிடுவதற்கு வருகை தந்ததாக நில அளவை திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

காணி சுவீகரிப்பு நடவடிக்கை தொடருமானால் எங்களது போராட்டங்களும் தொடரும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

டோஹா கட்டார் தூதரகத்திலுள்ள இந்து ஆலயம் அகற்றப்படாது

தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல உச்சளவு நடவடிக்கை எடுக்கப்படும்

லோரன்ஸ் செல்வநாயகம்

டோஹா கட்டாரிலுள்ள இலங்கை தூதரகத்தில் இந்துக்கள் வழிபடும் இந்து ஆலயத்தை அகற்றுவதற்கு எடுக்கும் முயற்சிகளை தடுப்பதற்கு உச்ச அளவில் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் போக்குவரத்து, வெளிவிவகாரம் மற்றும் ஊடகத்துறை ஆகிய அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம் பி. எஸ்.சிறீதரன் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறீதரன் எம்.பி அது தொடர்பில் தெரிவிக்கையில்,

டோஹா கட்டாரில் உள்ள இலங்கை தூதுதரகத்தில் இந்து ஆலயமொன்றும், பௌத்த ஆலயமொன்றும் உள்ளது. அங்கு பணியாற்றும் இந்துக்கள் அங்கு வழிபட்டு வருகின்றனர். எனினும் தற்போது அந்த இந்து ஆலயத்தை மூடுவதற்கு தூதுவர் முயற்சிக்கின்றார். அந்த ஆலயம் தொடந்தும் அங்கு இருப்பதற்கு இடமளிக்க வேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார்.

இதன்போது அதற்கு பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

அங்கு தூதுவர் எந்த தடைகளையும் விதிக்கவில்லை. அங்கே வருபவர்கள் சத்தம் செய்வதால் அந்த கட்டிடத்தின் உரிமையாளர் அது தொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளார். ஆனால் அந்த ஆலயத்தை மூடவில்லை. அதனை நடத்திச் செல்பவர்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த பிரச்சினை தொடர்பில் ஆராய்ந்து எந்த பாதிப்பும் இன்றி சாதகமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

விவசாய நடவடிக்கைகளுக்காக மண்ணெண்ணெய் விநியோகிக்க முறையான நடவடிக்கை

மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் ஊடாக ஒரு கூட்டு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்

மீனவர்களின் மண்ணெண்ணெய்ப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட அதே பொறிமுறையைப் பயன்படுத்தி எதிர்வரும் 03 நாட்களுக்குள் இலங்கையின் அனைத்து விவசாயப் பகுதிகளுக்கும் மண்ணெண்ணெய் விநியோகம் இன்று (29) முதல் ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதியின் பணிப்பாளர் நாயகம் (சமூக அலுவல்கள்) கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.

நவம்பர் 01 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை, நாளொன்றுக்கு 29 மண்ணெண்ணெய் பவுசர்கள் வீதம் விநியோகிக்கப்பட்டு வந்தன. எனினும் புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டத்தின் பிரகாரம் நவம்பர் 23 ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்காக 229 பவுசர்கள் (தினசரி சராசரி 45.8) விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் இது 17 சதவீத அதிகரிப்பாகுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நெல், தேயிலை, தென்னை, கறுவா, உருளைக்கிழங்கு, மரக்கறிகள், பழங்கள், தானியங்கள், மலர்கள் மற்றும் அலங்கார செடிகள், கால்நடை தீவனம் மற்றும் புல் வளர்ப்பாளர்களின் தேவைகளையும் கருத்திற்கொண்டு விவசாயத் தேவைகளுக்காக மண்ணெண்ணெய், டீசல் மற்றும் பெற்றோல் விநியோகிப்பதற்கான முழுமையான பொறிமுறை ஒன்றை மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் தயாரிக்குமாறு ஜனாதிபதியின் பணிப்பாளர் நாயகம் (சமூக அலுவல்கள்) கீர்த்தி தென்னகோன் உரிய அதிகாரிகளுக்கு கடந்த வாரம் பணிப்புரை விடுத்தார்.

பிரதேச செயலகத்தின் கள உத்தியோகத்தர்களால் உறுதிப்படுத்தப்பட்ட தரவுகளை கருத்திற்கொண்டு, விவசாயிகள், விவசாய உற்பத்தியாபாரிகள், சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகள் மற்றும் விவசாயத்துடன் தொடர்புடைய அனைத்து விநியோகிப்பாளர்களென எவரையும் கைவிடாமல், சிக்கனமான முறையில் எரிபொருளை விநியோகிப்பதே அரசாங்கத்தின் கொள்கையாகும் என்று தென்னகோன் தெரிவித்தார்.

மாகாண விவசாயம், கூட்டுறவு அமைச்சுகள், கால்நடை உற்பத்தி, பெற்றோலியக் கூட்டுத்தாபன விநியோக முகாமையாளர்களுடன் இணைந்து, அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் டீசல்/பெட்ரோல்/மண்ணெண்ணெயை விநியோகிப்பதற்காக தயார் செய்யப்படும் கூட்டுத் திட்டம் நவம்பர் 28 ஆம் திகதிக்குள் தயார் செய்து முடிக்கப்படும்.

இத்திட்டத்தில் விவசாயம், தோட்ட அமைச்சுகள், விவசாய சேவைகள் மற்றும் ஏனைய திணைக்களங்கள் ஆகியன இணைந்து செயற்படுமென்றும் அவர் கூறினார்.

இதேவேளை, விவசாய நடவடிக்கைகளுக்காக கூட்டுறவு எரிபொருள் நிலையங்களுக்கு தேவையான மண்ணெண்ணெய் கொள்வனவு செய்வதற்கு அவசியமான கடன் வசதிகளை கிராமிய வங்கிகளுடன் இணைந்து தயார்படுத்துமாறும் மாகாண சபை கூட்டுறவு ஆணையாளர்களுக்கு ஜனாதிபதி அலுவலகம் பணிப்புரை விடுத்துள்ளது.

தினகரன் வடக்கின் உதயம்

Vadakkin Uthayam

யாழ்.இ.போ.சபை ஊழியர்கள் திடீர் பணி பகிஷ்கரிப்பு

பருத்தித்துறை விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் நேற்று திங்கட்கிழமை (28) காலை முதல் திடீர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையத்திற்குள் உள் நுழையமுடியாதவாறு தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் "எமக்கு பாதுகாப்பு வேண்டும்", "நிர்வாகமே எமது உயிருக்கு யார் உத்தரவாதம்", "தனியார் பஸ் குழுவின் அராஜகம் ஒழிக" உள்ளிட்ட சுலோகங்கள் அடங்கிய அட்டைகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

இதன் காரணமாக பொதுமக்கள், அலுவலக ஊழியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் அசௌகரியங்களை அனுபவித்தனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

சில நாட்களுக்கு முன்னர் இலங்கை போக்குவரத்து சபை ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். இதனையடுத்து தாக்கிய நபர்களுக்கு நீதிமன்றம் பிணை வழங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே தாக்கிய நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி பகிஷ்கரிப்பை முன்னெடுப்பதாக இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் தெரிவித்தனர்.

தேசிய மட்டத்தில் சாதனை படைத்த மகாஜனாக் கல்லூரி வீராங்கனைகளுக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகத்தால் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான, விளையாட்டுப் போட்டிகளில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி 20 வயதுக்குட்பட்ட மற்றும் 17 வயதுக்குட்பட்ட பெண்கள் அணி தேசிய மட்டத்தில் வெற்றி வாகை சூடி சம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.அதேவேளை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணி தேசிய மட்டத்தில் வெற்றி வாகை சூடி சம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது .

தினகரன்
THINAKARAN
கிரைசன்

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 13ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜமாதுல் அவ்வல் பிறை 04

குறள் தரும் சிந்தனை



நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு

அறிவுள்ளவர்களுடன் கொள்ளும் நட்பு பிறைநிலவாகத் தொடங்கி முழுநிலவாக வளரும், அறிவில்லாதவர்களுடன் கொள்ளும் நட்போ முழுமதிபோல் முளைத்துப் பின்னர் தேய்பிறையாகக் குறைந்து மறைந்து போகும்.

சபரிமலையில் ஐயப்பன் தரிசனத்துக்காக இலட்சக்கணக்கில் குவியும் பக்தர்கள்!

ஐயப்பசுவாமியை தரிசனம் செய்ய உலகமெங்கும் இருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் சபரிமலையில் குவிந்து வருகின்றனர். மலை எங்கும் சரணகோஷம் எதிரொலிக்கிறது. மண்டல பூஜைக்காலம் தொடங்கியது முதல் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்துள்ளனர். கடந்த 12 நாட்களில் மட்டும் 52 கோடி 55 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது. இது கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் 5 மடங்கு அதிகமாகும்.

ஐயப்பனை தரிசனம் செய்ய மாதந்தோறும் பக்தர்கள் சென்று கொண்டிருக்கின்றனர். கார்த்திகை மாதம் முதல் தை மாத பிறப்பு வரை மண்டல மகரபூஜை காலமாகும். ஆண்டு தோறும் கார்த்திகை, மார்கழி மாதங்களில் மண்டல பூஜை, மகர விளக்கு பூஜை காலங்களில் இலட்சக்கணக்கான பக்தர்கள் 48 நாட்கள் விரதம் இருந்து தரிசனம் செய்ய மலையேறி வருகின்றனர்.

கடந்த 16ஆம் திகதியன்று இந்த ஆண்டு மண்டல பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோவில் நடைதிறக்கப்பட்டது. 17ஆம் திகதி முதல் பக்தர்கள் இருமுடி சுமந்து வந்து ஐயப்பனை தரிசனம் செய்கின்றனர். கொரோனா கட்டுப்பாடுகள் முழுமையாக நீக்கப்பட்டுள்ளதால் சபரிமலை ஐயப்பன் கோயிலில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்துள்ளது. அதிகாலை நடை திறக்கப்படுவது முதல் இரவு கோவில் நடை அடைக்கப்படும் வரை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பதினெட்டாம் படியேறி சபரிமலை ஐயப்பனை தரிசிக்கின்றனர்.

விடுமுறை நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமையில் மட்டும் ஒன்றே முக்கால் இலட்சம் பேர் தரிசனம் செய்துள்ளனர். எதிர் வரும் 30ஆம் திகதி வரை தரிசனத்திற்கு 8 இலட்சத்து 79 ஆயிரம் பக்தர்கள் 'ஒன்லைன்' மூலம் முன்பதிவு செய்துள்ளனர். உடனடி முன்பதிவையும் சேர்த்தால் 10 இலட்சம் பேர் முன்பதிவு செய்துள்ளனர். கடந்த 12 நாட்களில் மட்டும் கோயிலுக்கு 52 கோடி 55 இலட்சம் ரூபா வருமானம் கிடைத்துள்ளது. கடந்த ஆண்டு இதே காலத்தில் 9 கோடி 92 இலட்சம் ரூபா மட்டுமே வசூலாகி இருந்தது. சபரிமலைக்கு புனித யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்கள் ஆரியங்காவு, அச்சன்கோயில், குளத்துப்புழா, எரிமேலி,பந்தளம் ஆகிய ஐயப்பன் எழுந்தருளி அருள்பாலிக்கும் கோயில்களுக்கும் சென்று வழிபட்டு வருவது சிறப்பு.

சபரிமலைக்கு யாத்திரை செல்லும் பக்தர்கள் பயணக் களைப்பு நீங்க 'சாமியோ சரணம் ஐயப்பா' என்ற பக்தி முழக்கமிட்டு செல்வார்கள். கால்களில் செருப்பு அணியாவிடினும் மலை மீது ஏறும் பக்தர்களுக்கு கல்,முள் எதுவுமே வலிப்பதில்லை என்பது வியப்பான விடயமாகும்.

மருத்துவ, பொறியியல் துறைகளுக்கு தெரிவான காரைதீவு மாணவர்களுக்கு பாராட்டு விழா

கல்முனை றோட்டரி கழகம் வழங்கிய கௌரவம்

காரைதீவில் கடந்த வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சாதனை படைத்த ஆறு மாணவர்கள் கல்முனை றோட்டரி கழகத்தால் பொன்னாடை போர்த்தி, பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கல்முனை றோட்டரிக் கழகத்தின் 22 ஆவது தலைவராக றோட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட நிகழ்விலேயே இக்கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

புதிய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினது பதவியேற்பு வைபவம் காரைதீவு ஜெகராஜன், தலைவர் றோட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன்ஆகியோர் இக்கௌரவத்தை வழங்கினார்கள்.

இந்நிகழ்வின் போது, இவ்வருடம் மருத்துவம் மற்றும் பொறியியல் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

உயிரியல் துறையில் அகில இலங்கை ரீதியில் முதலாவது இடத்தைப் பெற்ற காரைதீவைச் சேர்ந்த மாணவன் தமிழ்வண்ணன் துவாரகேஷ் முதலில் பாராட்டி கௌரவிக்கப் பட்டார். அதன் பின்னர் மருத்துவத்துறைக்குத் தெரிவான காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி மாணவிகளான சகாதேவராஜா டிவானுஜா,லோகநாதன் புவித்ரா, தங்கவடிவேல் டயானு, ராஜேஸ்வரன் கம்ஷாயினி ஆகிய மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்..

அதனைத் தொடர்ந்து ரஜிநாதன் துர்க்கா லேடி லங்கா மண்டபத்தில் நேற்றுமுன்தினம்(27) நடைபெற்றது. பிரதம அதிதியான றோட்டரி மாவட்ட ஆளுநர் றோட்டரியன் புவது டி சொய்சா மற்றும் கௌரவ அதிதியான காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. பொறியியல் துறைக்கு தெரிவாகியிருந்த மைக்காக பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

காரைதீவு குறூப் நிருபர்

கல்முனை பிரதேசத்தில் புலமைப்பரிசில் சாதனையாளர்களை உருவாக்கும் திட்டம்

கல்முனை கல்வி வலயத்திலிருந்து தரம்_5 புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனையாளர்களை உருவாக்கும் நோக்கில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் முகமாக ஈ.டீ யு.ப்ரீ அகடமி (Edu Free Academy) நிறுவனத்தினால் இவ்வாண்டு (2022) புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான இலவச வினாத்தாள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் உபதலைவரும், நிறுவனத்தின் கல்முனை பிரதேச இணைப்பாளருமான எம்.என்.எம்.அப்ராஸ் இவ்வினாத்தாள்களை கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தின் அதிபர் எம்.ஜீ.எம். றிசாத்தீடம் வழங்கி வைத்தார்.

இரண்டாம் கட்டமாக விநியோகிக்கப்பட்ட இந்த வினாத்தாள்கள் ஈ.டீ யு.ப்ரீ அகடமி (Edu Free Academy) நிறுவன பணிப்பாளர்களான ஜ.எம். றொஸான் மற்றும் பாத்திமா ஸஹ்ரா நிஸ்பர் ஆகியோரின் வழிகாட்டுதலில் தயாரிக்கப்பட்டது.

முதலாம் கட்டமாக கல்முனை கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கு இவ்வினாத்தாள்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வுகளில் கிழக்கு மாகாண கணினி தொழில்நுட்ப பேரவை பணிப்பாளர் யு.எல்.என். ஹுதா உமர் அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிறுவனத்தினால் எதிர்காலத்தில் ஏனைய பிரிவு மாணவர்களின் கல்வி அடைவை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்கவுள்ளதாக கல்முனை பிரதேச இணைப்பாளர் எம். என்.எம்.அப்றாஸ் தெரிவித்தார்.

எஸ்.அஷ்ரப்கான்
(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

மஹஜன சம்பத 5000 ஆவது சீட்டிழுப்பு 2023 ஜனவரி 14 ஆம் திகதி கோலாகலம்

சீட்டிழுப்பு என்பதை ஒரு கலையாக நாம் எடுத்துக் கொண்டால், அக்கலையை வாடிக்கையாளருக்கு ஊக்கு வித்த நிறுவனம் சீட்டிழுப்பின் ஆரம்பகர்த்தாவான தேசிய லொத்தர் சபையாகும்.1963 இல் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஊடாக தேசிய லொத்தர் சபை உருவாக்கப்பட்டது.

அச்சபையின் முதல் தலைவராக ஸ்ரீமத் ரிச்சட் அலுவிகாரே நியமனம் பெற்றார். அதனையடுத்து தேசிய லொத்தர் சபை மக்கள் மத்தியில் மிகப் பிரபல்யம் பெற்று வீறுநடை போட்டது. லொத்தர் மூலம் தமது அதிர்ஷ்டத்தை சுரண்டிப் பார்க்கும் ஆர்வம் மக்கள் மத்தியில் உருவாக ஆரம்பித்த போது புதிய லொத்தர் ஒன்றின் தேவை ஏற்பட்டது. அதற்கமைய 1969 ஆம் ஆண்டு மாதத்துக் கொரு முறை சீட்டிழுக்கும் 'தேசிய சம்பத' என்ற ஒரு புதிய லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

இன்று சீட்டிழுப்புத் துறையில் உச்சத்தில் மிளிரும் இலங்கையின் பிரபல்யமான லொத்தரான மஹஜன சம்பத லொத்தரின் முதலாவது சீட்டிழுப்பு 1970 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28 ஆம் திகதி முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலைமையில் நடைபெற்றது. இன்று எமது நாட்டில் அதிக கோடீஸ்வரர்களும், இலட்சாதிபதிகளுமாக அதிக வெற்றியாளர்களை உருவாக்கிய லொத்தர், நாட்டின் இராஜரீக லொத்தராகக் கணிக்கப்படும் மஹஜன சம்பத லொத்தராகும்.

2005 ஆம் ஆண்டின் புகழ் பெற்ற வர்த்தக நாமமான ஜகொன் விருது மஹஜன சம்பத லொத்தருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது. முதலில் மாதாந்தமும், அதன் பிறகு வாரத்துக்கு ஒருமுறையும் அதன் பின்னர் வாரத்துக்கு இரண்டு, மூன்று முறை என்றவாறு அதிகரிக்கப்பட்டு இன்று ஏழு நாட்களிலும் வெற்றிகளைக் கொண்டு வரும் சீட்டிழுப்பாக உருவாகியுள்ளது. மக்கள் மத்தியில் பல வருடங்களாக கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கையே இதற்குக் காரணமாகும்.

வாடிக்கையாளர்களை மகிழ்விக்க கவர்ச்சிகரமான பரிசுகள்

கிராமம் தோறும் வெற்றியாளர்களை உருவாக்கி அவர்களுக்கு கோடிக்கணக்கில் பணப்பரிசுகளை வழங்கும் மஹஜன சம்பத நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் முன்னோடியாக இருந்து அதிக பணத்தொகையை பெற்றுக் கொடுத்தது. எமது நாட்டில் கிராமம், நகரம் என்ற வகையில் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைக்கும் மஹஜன சம்பதவின் ஒத்துழைப்பு தவறாமல் கிடைத்துள்ளது. இலங்கையில் முதலாவது அதிக சீட்டிழுப்பு தவணையை மேற்கொண்ட சீட்டிழுப்பாக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் திகதி 2023 ஜனவரி 14 ஆம் திகதி என்பதை கூறிக் கொள்வதில் தேசிய லொத்தர் பெருமையடைகின்றது.

இவ்வகையில் இலங்கையில் முதன்முறையாக அதிக எண்ணிக்கையோடு மகுடம் ஏந்தத் தயாராகின்றது.

மஹஜன சம்பத வாடிக்கையாளர்களினதும் விற்பனை முகவர்களினதும் வலையமைப்பின் அதிசிறந்த ஈர்ப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கில் பொருள் மற்றும் பணப் பரிசுகள் பலற்றை மேலதிக பரிசுகளாக உள்ளடக்கி 100 ரூபாவுக்கு இரட்டை லொத்தரொன்றை சந்தையில் அறிமுகப்படுத்துகின்றது. இவ் விஷேட சீட்டிழுப்பினால் அதிகமான பரிசுகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 5000 ஆவது மஹஜன சம்பத சீட்டிழுப்பை கொண்டாடும் இத்தருணத்தில் டிக்கட்டுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. எனவே விரைவில் அதிர்ஷ்டத்தை உரிமையாக்கிக் கொள்ளுங்கள்.

லொத்தரின் ஆரம்ப கர்த்தாவான தேசிய லொத்தர் சபையின் அதிக எண்ணிக்கையில் சீட்டிழுக்கப்பட்ட மஹஜன சம்பத டிக்கட்டின் 5000 ஆவது சீட்டிழுப்பு வரலாற்றில் பதியப்படுவதோடு இச்சீட்டிழுப்பு 2023.01.14 ஆம் திகதி கோலாகலமாக நடைபெறவுள்ளது.

கொவிட் 19 அச்சுறுத்தலுக்கு மத்தியில் மக்களின் பொறுப்பு

நவீன டிஜிட்டல் உலகில் மனிதகுலத்திற்கே பெரும் சவாலாகத் தோற்றம் பெற்றிருந்த கொவிட் 19 தொற்றைக் கடும் உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புகளுடன் இலங்கை கடும் வீழ்ச்சி நிலைக்கு கொண்டு வந்தது. சுமார் பத்து பன்னிரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்நாட்டில் இத்தொற்றானது வீழ்ச்சிநிலைக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து இயல்புநிலையும் கட்டம் கட்டமாக நாட்டில் ஏற்படுத்தப்பட்டது.

இத்தொற்று பரவுதல் தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களும் இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியும் இதன் பரவுதல் அச்சுறுத்தலை பெருவீழ்ச்சிக்கு கொண்டு வரப் பெரிதும் உதவின. அதனைத் தொடர்ந்து இந்நாட்டில் இத்தொற்றின் பரவுதல் அச்சுறுத்தல் பெரு வீழ்ச்சி நிலையில் உள்ளது. ஆனாலும், உலகின் சில நாடுகளில் இத்தொற்று அதிகரித்த நிலையிலேயே காணப்படுகிறது.

2019ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சீனாவில் தோற்றம் பெற்ற இத்தொற்று, அங்கு ஆரம்ப காலப்பகுதியில் கட்டுப்பாட்டு நிலையில் இருந்ததோடு, கடந்த இரண்டொரு மாதங்களாக அதிகரித்துக் காணப்படுகிறது. அங்கு முடக்கம் உள்ளிட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இத்தொற்று பரவுதல் இலங்கையில் பெருவீழ்ச்சி நிலையில் காணப்படுகின்ற போதிலும், கடந்த சில தினங்களாக இத்தொற்றுக்குள்ளானவர்களாக அடையாளம் காணப்படுகின்றவர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒரு வார காலப்பகுதியில் சுமார் 150 பேர் இத்தொற்றுக்குள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, எட்டுப்பேர் உயிரிழந்துமுள்ளனர். இதனை சுகாதார அமைச்சின் தரவுகளும் உறுதிப்படுத்தியுள்ளன.

'இத்தொற்றுக்குள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள போதிலும், கொழும்பு நகரில் மற்றொரு கொவிட் 19 பாரிய அலை ஏற்படுவதற்கான அச்சுறுத்தல் இல்லை. இங்குள்ள பெரும்பகுதியினர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்' என்று கொழும்பு மாநாகர சபையின் பிரதம மருததுவ அதிகாரி டொக்டர் ருவன் விஜயமுனி குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத், 'கொவிட் 19 தொற்றுக்குள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டாலும் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல் உள்ளிட்ட இத்தொற்று பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பு விதிமுறைகளை முன்னெடுப்பது குறித்து இன்னும் கவனம் செலுத்தப்படவில்லை' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இடத்தில்தான் இலங்கையர் ஒவ்வொருவரும் இத்தொற்றுப் பரவுதலைத் தவிர்ப்பதற்கான சுகாதார வழிகாட்டல்களை சுயமாகவும் முறையாகவும் பின்பற்ற வேண்டிய பொறுப்பைக் கொண்டவர்களாக இருந்து கொண்டிருக்கின்றனர்.

நாடு ஏற்கனவே பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கின்றது. அதனால் சுற்றுலாத்துறை மூலமும் வருவாயை நாடு எதிர்பார்த்துள்ளது. இந்நிலையில் இம்மாதம் (நவம்பர்) 40 ஆயிரம் உல்லாசப் பயணிகள் நாட்டுக்குள் வருகை தந்துள்ளனர். கிழக்காசிய நாடுகளைச் சேர்ந்த 3000 உல்லாசப் பயணிகளைக் கொண்ட கப்பலொன்று அடுத்துவரும் சில தினங்களில் இலங்கையை வந்தடையவுள்ளது.

மேலும் சீனா தற்போது முன்னெடுத்துள்ள இத் தொற்று பரவுதல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் தளர்த்தியதும் ஒரு மில்லியன் உல்லாசப் பயணிகளை அங்கிருந்து இலங்கைக்கு கொண்டு வர நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் பாலித கொஹன குறிப்பிட்டுள்ளார்.

இவை இவ்வாறிருக்க, குளிர்கால நாடுகளில் இருந்து அதிகளவிலான உல்லாசப் பயணிகள் வழமை போன்று இலங்கைக்கு வருகைதரும் காலமாக எதிர்வரும் வாரங்கள் இருக்கும். ஆனால் வருகை தரும் உல்லாசப் பயணிகளில் முகக்கவசம் அணியக் கூடியவர்களும் வரலாம், அணியாதவர்களும் இருக்கலாம். அதேபோன்று இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியைப் பெற்றவர்களும் இருக்கலாம். பெறாதவர்களும் கூட வரலாம். அதேநேரம் இந்நாட்டு சனத்தொகையிலும் பாதிப்பேர் இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பூஸ்டர் தடுப்பூசியைப் பெறாதவர்களாக உள்ளனர்.

அதனால் இத்தொற்றுக்குள்ளாகக்கூடிய அதிக அச்சுறுத்தலைகளைக் கொண்டிருப்பவர்கள் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள், இரண்டு வயதுக்கு குறைந்த சிறுவர்கள் உள்ளிட்டவர்கள் அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களை முறையாகக் கைக்கொள்வதோடு சனநெரிசல் மிக்க இடங்களுக்கு செல்வதைத் தவிர்த்துக் கொள்வதிலும், வீடுகளில் இருப்பதிலும் கூடுதல் கவனம் செலுத்தத் தவறக்கூடாது என்றும் டொக்டர் ஹேமந்த ஹேரத் கேட்டுள்ளார்.

ஆகவே அதிக அந்நிய செலாவணியை ஈட்டிக் கொள்வதில் கவனத்தைக் குவித்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் தற்போதைய சூழலில், ஒவ்வொரு குடிமகனும் கொவிட் 19 தொற்று பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கான பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வது இன்றியமையாததாகும். அது நாட்டுக்கும் மக்களின் ஆரோக்கிய பாதுகாப்புக்கும் அளிக்கும் பாரிய பங்களிப்பாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

வைரவிழா காணும் அநு/கெகி/உடநிதிகம அல்மினா மகா வித்தியாலயம்

உடநிதிகம அல்மினா மகா வித்தியாலயமானது அநுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவ செயலாளர் பிரிவில் உடநிதிகம எனும் குக்கிராமத்தில் அமைந்துள்ளது.

இப்பாடசாலை 1961 ஆம் ஆண்டின் இறுதியில் அரச பாடசாலையாகப் பதியப்பட்டது.1962 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை அறுபதாண்டு அகவையில் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு பிரதேசத்திற்கு சிறந்த கல்வியை வழங்கும் சக்தியாக கம்பீரமாய் எழுந்து நிற்கின்றது.

எமது பாடசாலை கடந்து வந்த பாதை

1962 ஆம் ஆண்டு உடநிதிகம கிராமத்தைச் சேர்ந்த அல்ஹாஜ் அபுல் ஹஷனின் முயற்சியினால் ஜனாப் முஹம்மது காஸிமின் சிறு குடிசையில் இரண்டு ஆசிரியர்களுடனும் 21 மாணவர்களுடனும் ஆரம்பிக்கப் பட்டதாகும்.

1962 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி அரசாங்கத்தினால் அரசினர் சிங்கள, முஸ்லிம் பாடசாலையாகப் பதியப்பட்டு முதலாவது அதிபராக எலகமுவையைச் சேர்ந்த திருமதி M.G.திலகரத்ன நியமிக்கப் பட்டார்.

1968 ஆம் ஆண்டு M.S.M.ஹாஸிம் அதிபருடைய காலப்பகுதியில் பாடசாலைக்கான நிலையான கட்டட மொன்று அரசினால் நிர்மாணிக்கப் பட்டு வழங்கப்பட்டது.

1972 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி ஜனாப் A.A.கபூர் அதிபருடைய காலப்பகுதியில் தரம் 06 வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அரசினர் முஸ்லிம் பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. 1977 மார்ச் மாதம் 16 ஆம் திகதி M.U.அபுல் ஹஸன் அதிபர் காலப்பகுதியில் தண்ணீர் பிரச்சினையை நிவர்த்தி செய்யும் பொருட்டு கெக்கிராவ பாராளுமன்ற உறுப்பினர் A. M.ஜினதாஸவின் நிதியொதுக்கீட்டில் கிணறொன்று நிர்மாணிக்கப்பட்டது.

1991 பெப்ரவரி 07ம் திகதி அதிபராக பஹலகமையைச் சேர்ந்த M.M. இஸ்மாயில் பொறுப்பேற்று 1993 ஆம் ஆண்டு மே 28 ஆம் திகதி தரம் 09 ஆரம்பிக்கப்பட்டது. 1994 ஜனவரி 07ம் திகதி ஹோராப்பொலையைச் சேர்ந்த அதிபர் M.A.C.ஆப்தீன், 1994 ஆம் ஆண்டு 10 ம் தரத்தை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்தினால் அனுமதியளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1995 ஆம் ஆண்டு 13 மாணவர்களைக் கொண்டு தரம் 11 ம் ஆரம்பிக்கப்பட்டது.

1999 ஒக்டோபர் 12 ஆம் திகதி அதிபராக நியமிக்கப்பட்ட பஹலகமையைச் சேர்ந்த M.S.ஆப்தின், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களின் முயற்சியினாலும் காலஞ் சென்ற வடமத்திய மாகாண தமிழ்ப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் Y. ஓமர் தீனினால் அதிபர் விடுதிக்கான நிதியொதுக்கப் பட்டதுடன் 2002 ஏப்ரல் மாதத்தில் கட்டட வேலைகள் நிறைவு செய்யப்பட்டு பாடசாலைக்கு கையளிக்கப்பட்டது.

எமது பாடசாலையின் பத்தாவது அதிபராக J. சுலைமான் லெப்பை 2006 ஏப்ரல் 25 ஆம் திகதி கடமை யேற்றார்.அவர் 2013 ஜனவரி 01 ஆம் திகதி இடமாற்றப்பட்டார்.

அதன் பின் 2013 ஜனவரி 10 ஆம் திகதி முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும் அகில இலங்கை சமாதான நீதவானுமாகிய H.L. கபீர் அதிபராக பொறுப்பேற்று இன்று வரையும் சிறப்பாக சேவையாற்றி வருகின்றார்.இவரது சேவைக்காலமானது வித்தியாலயத்தின் பொற்காலமாகும்.

அவர் கடமை பொறுப்பேற்ற போது அதிபர் உட்பட ஏழு ஆசிரியர்களே இருந்தனர். கல்விசார் ஊழியர்களின் பற்றாக்குறை மாணவர்களின் கல்வியில் பின்னடைவை ஏற்படுத்துவதை உணர்ந்த அதிபர்,உடனடியாக மேலும் ஏழு ஆசிரியர்களை தொண்டர் ஆசிரியர்களாக உள்வாங்கி அவர்களின் சேவையைப் பெற்றுக்கொண்டார்கள்.அத்துடன் நின்று விடாது தமது பாரிய முயற்சியினால் இன்று ஆசிரியர் குழாத்தின் எண்ணிக்கையை 26 ஆக உயர்த்தி

பரீட்சையில் 67% சித்தியடைந்து, வலய மட்டத்தில் மூன்றாமிடத்தை பெற்று கொண்டது.

க.பொ.த உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்க 2014 ஆம் ஆண்டு அதிபரினால் பாரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு 2015 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர அழகியல் பிரிவு பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. இது எமது பாடசாலையின் நாமத்தை மென்மேலும் மெரு கூட்டியது. அதன் பின்னர் அ/உடநிதிகம அல்மினா மகா வித்தியாலய மென புதிய நாமத்துடன் கம்பீரமாக எழுந்து நின்றது.

2016 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் 100% பெறுபேற்றினைப் பெற்று பாடசாலையானது வலயத்தில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. அத்துடன் 2020 ஆம் ஆண்டு க.பொ.த உயர் தரத்தில் 100% பெறுபேற்றினைப் பெற்றுக்கொண்டது.

அதிபர், கல்வியில் மட்டுமல்ல, பௌதிக வள அபிவிருத்தியிலும் பாரிய பங்காற்றுகின்றார்.இவர் அதிபராக நியமிக்கப்பட்ட காலப்பகுதியில் பாடசாலை வளாகம் சுற்றுவேலி அற்று மாட்டு கொட்டகையாகக் காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டு அப்போதைய மாகாண சபை முதலமைச்சராக இருந்த S.M.. ரஞ்சித் சமரகோனின் நிதியொதுக்கீட்டில் சுற்று மதில் அமைக்கப் பட்டு கட்டடங்கள் அனைத்தும் திருத்தப்பட்டு நிறப்பூச்சுக்கள் பூசப் பட்டன.

பழைய மலசலகூடங்கள் இரண்டும் அகற்றப்பட்டு உடனடியாக புதிய மலசலகூடங்கள் அமைத்து மாணவர்களின் பாவனைக்கு ஒப்படைக்கப்பட்டது. அத்துடன் மாணவர்களிற்கான குடிநீர் வசதியும் செய்து கொடுக்கப்பட்டது.

பிரதான கட்டடத்தின் முன்ப குதியானது மழை காலத்தில் நீர் தேங்கி நிற்பதுடன் மாணவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுவது அதிபரினால் இனங்காணப்பட்டு துரிதமாக குழிகள் மண்போட்டு நிரப்பப் பட்டதுடன் கல் பதிக்கப்பட்டது. அத்துடன் பாடசாலை சூழலை அலங்கரிக்கும் முகமாக நீர்வீழ்ச்சி யொன்று அமைக்கப்பட்டதுடன் எழுபத்தைந்து தென்னங்கன்றுகளும் இருபது மாங்கன்றுகளும்,100 வாழைக்கன்றுகளும்,75 பூச்செடிகளும் நடப்பட்டன.

நாளுக்கு நாள் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பினால் கட்டடப் பற்றாக்குறை ஏற்பட்டது.இதனை ஈடு செய்யும் முகமாக அதிபர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பெற்றோரின் ஒத்துழைப்புடன் தரம் 12 ற்கான புதிய வகுப்பறை கட்டடமொன்று கட்டப் பட்டதுடன்,இரண்டு வெளிவாரி கொங்ரீட் இருக்கை கொண்ட வகுப்பறைகள் அமைக்கப்பட்டன.

மாணவர்களின் கல்வியுடன் மற்றும் நின்றுவிடாது தமது இணைப்பாட விதான ஆற்றல்களை வெளிக்காட்டும் முகமாக 2020ம் ஆண்டு விளையாட்டுப் போட்டியில் அகில இலங்கை மட்டத்தில் தரம் 04 மாணவர்கள் முதலாமிடம், மாகாண மட்ட தமிழ் தினம், சமூக விஞ்ஞான தினப்போட்டி, ஆங்கில, சிங்கள தினப் போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றியமை குறிப்பிடலாம்.

60 ஆவது அகவையில் கால் பதிக்கும் எமது பாடசாலைக்கு வாசிக சாலை, விஞ்ஞான ஆய்வு கூடம் இன்மை பாரிய குறைபாடாகவே உள்ளது.

இப்பாடசாலையானது எதிர்காலத்தில் நாட்டிற்கு தேவையான நற் பிரஜைகளையும் பயனுள்ள அறிவாளிகளையும் உருவாக்கும் என்பதில் எத்தகைய ஐயமுமில்லை.

பாடசாலை அபிவிருத்தி சங்க நிருவாக உறுப்பினர்கள்

தலைவர் : H.L. கபீர் (அதிபர்)
செயலாளர் : Y.L.M. ரிசான்

பொருளாளர்: S.M.ரிபான் (ஆசிரியர்)
உறுப்பினர்கள்:
1. U.L.A. வஹாப் (ஆசிரியர்)
2. M.S.M. ரிபான் (ஆசிரியர்)
3. H.L.P. சஹானா (ஆசிரியை)
4. J. மர்ஜியா (ஆசிரியை)
5. M.S. நளீர்
6. S.M.இத்ரீஸ்
7. M.L. மஜீத்
8. A.C. நசாம்
9. வஹாப்தீன்
10. பாஹிம்

பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள்

H.L கபீர் (அதிபர்) (நிறுவனத் தலைவர்)
தலைவர்: பீ.எம். முஜாஹித் (மௌலவி)
செயலாளர்: ஏ.சி.எம். ஷாபிக் (ஆசிரியர்)
பொருளாளர்: ஏ.ஜே. எம். சைபுல் லாஹ் (ஆசிரியர்)
உப தலைவர்: எச். முபாசிர் (மௌலவி)
உப செயலாளர்: எஸ்.ஏ.எம். ரிம்சிகான் (ஆசிரியர்)
கணக்காய்வாளர்: எம். உசாமா
ஒருங்கிணைப்பாளர்: வை.எல். எம். ரிம்சிகான் (ஆசிரியர்)
உறுப்பினர்கள்:
எஸ். எம். நசீர் (சிரேஷ்ட மொழி பெயர்ப்பாளர், இலங்கைப் பாராளுமன்றம்)
ஐ. நளீம் (சட்டத்தரணி உயர்நீதி மன்றம்)
எம்.எச்.அனஸ் (பொறியியலாளர்)
எம்.எச். பர்ஹான் (மௌலவி)
எம். அதாவுல்லாஹ் (BDS)
எம்.எஸ்.எம். ரஹுமான் (முன்னாள் ப.மா.ச. தலைவர்)

தகவல் உதவி:
எ.என்.எம். நிப்கான் (ஆசிரியர்)
வை.எல்.எம். ரிம்சிகான் (ஆசிரியர்)

தாயரிப்பு
எம். சதுர்தீன் (J.P)
மாத்தளை சுழற்சி நிருபர்

திருவருகைக்காலம்
நம்பிக்கையின் பேருண்மை

"உன்னதங்களிலே இறைவனுக்கு மகிமை உண்டாகுக. பூவுலகில் நல் மனதோருக்கு அமைதியும் ஆகுக" திருவருகைக் காலத்தின் முதல் வாரத்தில் கால் பதித்துள்ளோம்.

அன்பையும் மகிழ்ச்சியையும் இந்த உலகிலே விதைப்பதற்கே இயேசு கிறிஸ்து இந்த பூமியில் மனிதனாக அவதரித்தார்.

கிறிஸ்து பிறப்பின் நத்தார் பண்டிகையை கொண்டாடுவதற்கு ஆயத்தம் செய்யும் வகையிலேயே திருவருகைக்காலம் ஒவ்வொரு வருடமும் வருகின்றது.

அமைதியின் தூதனாய் நம் ஆண்டவர் இயேசு இந்த மண்ணில் மனுவுரு எடுத்தார் என்பதே மகிழ்ச்சி தரும் செய்திதான்.

அந்த மகிழ்ச்சியின் செய்தி இந்த உலகில் முதல் முதலில் ஏழைகளான இடையர்களுக்கே அறிவிக்கப்பட்டது. "தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில், ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தி னீர்" என லூக்கா நற்செய்தி 10:21 வசனம் தெரிவிக்கின்றது.

பரிசுத்த வேதாகமத்தின் வாசக தொடர்ச்சியாக ஒரு கேள்வி:

நாம் யாரைப் போல இருகிறோம்? "ஞானிகள்அறிஞர்கள்" போலவா அல்லது "குழந்தைகள்" போலவா? நமது வாழ்க்கைமுறை நம்மை எந்த நிலையில் வைத்திருக்கிறது?

இந்தக் கேள்விக்கான பதில் கடினமாகத் தோன்றலாம். குழந்தைகளைப் போல மாசற்ற மனநிலை கொண்டிருப்பது மேன்மையானது என்று இயேசு கூறுவதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

இல்லையெனில் நாம் நம்மை "ஞானிகள்அறிஞர்கள்" நிலையிலேயே எண்ணிப் பார்த்திட விழைவோம்.

ஞானிகள்,அறிஞர்கள் போல இருப்பதில் தவறேதும் இல்லை

ஆனால், இந்த இடத்தில் "ஞானிகள்அறிஞர்கள்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தி யாரை இயேசு சுட்டிகாட்டுகிறார் என்பதை நாம் தெரிந்து கொள்வது அவசியம்.

உண்மைக்குப் புறம்பான வகையில் தங்களைப் பற்றி உயர்வாக எண்ணிக்கொண்டு, 'எல்லாம் எமக்குத் தெரியும்' என்ற மனநிலையில் பகட்டான வாழ்க்கைமுறைகளைக் கடைப் பிடிப்போரையே "ஞானிகள்அறிஞர்கள்" என்று குறிப்பிடுகிறார்.

'எல்லாம் எமக்குத் தெரியும்' என்ற மனநிலையில் இருப்போர் உண்மையிலேயே எல்லாம் தெரிந்தவர்கள் இல்லை. அத்தகைய மனநிலை கொண்டிருப்போர் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள் என்பதே உண்மை.

ஒரு குழந்தையைப் போலப் பணிவோடும், திறந்த மனதோடும் எதையும் கற்றறிந்து கொள்ளுகின்ற மனநிலையே ஏற்புடைய பண்பு என்று இயேசு எடுத்துச் சொல்கிறார்.

பணிவும், திறந்த மனமும் கொண்ட குழந்தை மனநிலையே விண்ணக ஞானத்தை ஏற்றுக்கொள்கின்ற பக்குவத்தை நமக்குள் உண்டாக்குகின்றது.

நம்பிக்கையின் மறையுண்மைகளை ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் மறைத்து, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தியதற்காக இயேசு வானகத் தந்தையைப் போற்றுகிறார்.

இயேசுவின் இந்தக் கூற்று, திருவருகைக் காலத்தில் அடியெடுத்து வைக்கின்ற நமது சிந்தனைக்கு ஏற்ற கருப்பொருள் ஆகும்.

இறைவன் மனிதனாக உருவடுத்த திருஅவதாரத்தின் மறையுண்மைகளை நாம் ஆய்ந்து அறிந்துகொள்ள முயல்கின்ற இந்தத் திருவருகைக் காலத்தில் குழந்தைகளையொத்த நம்பிக்கையும், திறந்த மனமும் கொண்டிருப்பது அவசியமானதே.

இத்தகைய பணிவும், திறந்த மனமும் இல்லையென்றால் இந்தக் கிறிஸ்து பிறப்பு விழா நாள்களில் கடவுளிடமிருந்து வரும் வியத்தகு கொடையை நாம் முழுமையாக அறிந்து கொள்ள இயலாது.

நாம் திறந்த மனதோடு இருக்கிறோமா என்பதைச் சிந்தித்துப் பார்ப்போம். நம்மோடு உடனுறைந்து வாழ்ந்திட மனிதனாக உருவெடுத்த கடவுளின் திருஅவதாரத்தின் மறையுண்மைகளில் மூழ்கிட நாம் விருப்பத்தோடு தயாராக இருக்கிறோமா?

நமது நம்பிக்கையின் பேருண்மைகளை ஆய்ந்தறிந்திட தேவையான குழந்தை மன நிலையை ஆர்வத்தோடு பற்றிக்கொள்ள நாம் தயாராக உள்ளோமா? இந்தக் கேள்விகளுக்கு நமது பதில் "ஆம்" என்றிருக்குமானால், இந்தத் திருவருகைக் காலமும், வரவிருக்கின்ற கிறிஸ்து பிறப்பு விழாக் காலமும் சிறப்பானதாக அமைந்திடும். அதற்காக இறை அருளை வேண்டுவோம்.

இரான்சம் அமிர்தமணி...

விழிப்பாய் இருங்கள்
ஆண்டவர் தரும் அறிவுறுத்தல்

திருவருகைக் காலத்தின் முதல் வாரத்தில் ஆண்டவர் நமக்கு விழிப்பாய் இருக்குமாறு அறிவுறுத்துகிறார்.

ஏழு வயது சிறுவன் ஒருவன் ஆங்கில மொழி பாடசாலையொன்றில் 3ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். அவனது தந்தை ஒரு பொறியியலாளர்

அவர் வெளி நாடொன்றில் தொழில் செய்து கொண்டிருந்தார். அவன் அம்மா, அக்கா அந்த சிறுவன் ஆகிய மூவரும் விடுமுறையில் அப்பாவோடு இரு வாரங்கள் தங்கி வருவதற்காக வெளிநாடு செல்ல ஆயத்தமானார்கள்.

பாஸ்போர்ட், விசா எல்லாவற்றையும் ஒழுங்கு செய்து புறப்பட இரண்டு நாட்கள் இருந்தன. அப்பாவுக்கு விருப்பமான ஒரு பொருளை வாங்கிக் கொண்டு போக வேண்டும் என்று விரும்பி அருகில் இருந்த கடைக்குச் சென்று அந்த சிறுவன் அதை வாங்கி வரும்போது, தரையில் அறுபட்டுக்கிடந்த மின்சாரக் கம்பியை மிதித்து அங்கே பிணமானான் சிறுவன்.

ஒரு வாழ்வு மலருமுன்னே மறைந்து, எல்லோரையும் துயரக் கடலிலே ஆழ்த்தியது.இது எதிர்பாராத துயரமான சம்பவம் திருவருகை காலத்தில் முதலாவது வார்த்தை ஆரம்பிக்கும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நற்செய்தியில் நாம் விழிப்பாய் இருக்கவும், ஆயத்தமாக இருக்கவும் அழைப்பு விடுக்கிறார் இயேசு.

அதற்காக ஒரு நிகழ்வையும் ஓர் உவமையையும் தருகிறார். மக்கள் கடவுளை மறந்து சிற்றின்ப வாழ்வில் மூழ்கினார்கள். வெள்ளப் பெருக்கைக் கொண்டு அம்மக்களை அழிக்க விரும்பி னார் கடவுள்.

நீதிமானான நோவாவை நோக்கிக் கப்பல் கட்டச் சொன்னவுடன் அவர் பணிந்து அதற்கான வேலையை ஆரம்பிக்கிறார். மற்றவர்கள் அவரைப் பார்த்து தண்ணீர் இல்லையே! ஏன் இந்தப் பெரிய கப்பல் என்று ஏளனம் செய்கின்றனர். பெட்டக வேலை முடிந்தவுடன் பெருமழை வந்தது. நோவாவின் குடும்பம் காப்பாற்றப்பட்டது. ஆனால் தயாரின்றி இருந்த மற்றவர் அனைவரும் அழிந்தனர் (மத்: 24:3744).

இரண்டாவது உவமையாக இயேசு சொல்கிறார். இருவர் வயலில் இருப்பர். ஒருவர் எடுத்துக் கொள்ளப்படுவார். மற்றவர் விடப்படுவார்.

புனித பேதுரு கூறுவதுபோல ஆண்டவருடைய நாள் திருடனைப்போல் வரும் (2பேதுரு 3:10). ஆண்டவருடைய நாள் என்பது பழைய ஏற்பாட்டிலே கடவுளின் வாக்குறுதியின் நிறைவாக மெசியாவின் வருகையைக் குறிப்பதாக இருந்தது. ஆனால் புதிய ஏற்பாட்டிலே இயேசுவில் நாம் பெறும் மீட்பைப் பற்றியதாக, இயேசுவை நம் இரட்சகராக ஏற்று நாம் பெறும் நித்திய வாழ்வைப் பற்றியதாக உள்ளது.

கடந்த ஞாயிறு முதல் வாசகத்திலே ஏசாயா இறை வாக்கினர் கூறுவது போல நாம் அனைவரும் பயணிகள். நமது நோக்கம் எருசலேம் தேவாலயம் அல்ல. மாறாக இறைவனோடு என்றும் வாழ்வுக்கு, அந்த உன்னத வாழ்வுக்கு, சீயோன் மலைக்குச் செல்லத் தயாராக இருக்க அழைப்பு விடுக்கிறார்.

சிறுவன் அனிஸ் வாழ்வு திடீரென முடிவுக்கு வந்ததுபோல, நமது வாழ்வு என்று முடிவுபெறும் என்று தெரியாததால் நாம் என்றும் விழிப்போடும். ஆயத்தத்தோடும் வாழ வேண்டும் என்பதை இயேசு அந்த நற்செய்தில் வலியுறுத்துகிறார் (மத்: 24:4344).

இன்றைய சமுதாயத்தை ஆட்டிப்படைப்பது மனவிரக்தியும் மனச்சோர்வுமாகும். இத்தகைய மனவிரக்தியிலும், மனச்சோர்விலும் வாழும் நமக்குப் புனித பவுல் அடிகளாரின் இரண்டாம் வாசகம் (உரோ. 13:1114), நம்பிக்கையையும் ஆற்றலையும் ஊட்டவல்லவையாக அமைகின்றன. தீமைகளும் அநீதிகளும் இரவின் செயல்களும் முடியப்போகின்றன என்று முன்னறிவிக்கிறார். மீட்பு அண்மையில் உள்ளது. இரவு முடியப்போகிறது. பகல் நெருங்கி வந்துவிட்டது என்றும் உற்சாகமூட்டும் வார்த்தைகளைத் தருகிறார் கடவுள். புதிய சமுதாயத்தைப் படைக்க நம்மிடத்தில் இருக்க வேண்டியது துணிவும் தளராத மனமும் விடாமுயற்சியும், இலட்சியத் தெளிவும் ஆகும். ஆண்டவரின் நாள் எப்போது வரும் என்று நமக்குத் தெரியாததால் நாம் மனப்பக்குவத்துடன் தயாராக இருக்க வேண்டும்.

நாளை மனம் திரும்பலாம், என்று தள்ளிப் போடும்மடமை,முட்டாள்தனத்திற்குஇன்றுமுடிவு கட்டியாக வேண்டும். கடந்த கால வாழ்வை எண்ணிக் கவலைப்பட்டு, எதிர்காலத்தை நினைத்து அச்சத்துடன் வாழ்வதை விட்டு, நிகழ்காலத்தில் நாம் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். இருளின் ஆட்சிக்குரிய செயல்களான களியாட்டம், குடிவெறி, கூடாத ஒழுக்கம், காமவெறி, சண்டை சச்சரவுகளை நாம் தவிர்க்க வேண்டும் (உரோ. 13:11).

ஒளியின் படைக்கலன்களாக அன்பு, விசுவாசம். நம்பிக்கை ஆகிய கொடைகளை (1தெச.5:8) அணிந்து கொண்டு (உரோ.13:14) நம்மைச் சந்திக்க வரும் இயேசுவோடு நாம் நம்மையே ஒன்றித்து, உறவை வளர்த்து அவரோடு பயணம் செய்வோம். அதற்காக இறையருள் வேண்டுவோம்.

அருட்பணி மி.அருள் ...

அமைதியின் கைவினைஞர்களாவோம்

திருத்தந்தை பிரான்சிஸ்

அர்ப்பணிக்கப்பட்ட நபர்கள் தங்கள் சொந்த சமூகத்திலும் வெளியிலும் சுவர்களைக் கட்டாமல் அமைதிப் பாலங்களைக் கட்டும் அமைதியின் கைவினைஞர்களாக திகழ வேண்டும் என பரிசுத்த பாப்பரசர் தெரிவித்துள்ளார்.

அமைதி இயேசு தரும் பரிசாகும். அவரது கருணையின் பலன் என்றும் தன்னோடும் கடவுள், மனிதர், மற்றும் படைப்போடும் இணக்கம் ஏற்படுத்தும் அமைதியின் கைவினைஞர்களாக மாறுவோம் என்றும் திருத்தந்தை தெரிவித்துள்ளார்.

வத்திக்கானில் துறவு சபைகளின் தலைவர்கள் மற்றும் கூட்டமைப்பினரை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எல்லா மக்களும், குறிப்பாக அர்ப்பணிக்கப்பட்ட ஒவ்வொருவரும் அமைதியின் கைவினைஞர்களாக மாற வேண்டும் என்று அழைப்புவிடுத்த திருத்தந்தை அமைதி நம் அனைவரையும் சகோதர சகோதரிகளைப் போல உணர வைக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

போரற்ற அல்லது போர் முடிவிற்கு வரும் சூழ்நிலையையே அமைதி மற்றும் நல்வாழ்வு நிலை அவசியம் என்று நாம் தவறாக நினைக்கின்றோம் எனவும் எடுத்துரைத்தார்.

இயேசுவின் அமைதி அவர் தரும் பரிசு, இரக்கத்தின் பலன் என்றும் தன்னோடும் கடவுளோடும் பிற மனிதர்களோடும் படைப்போடும் இணக்கமான உறவை ஏற்படுத்த உதவுகின்றது.

இரக்கத்தின் அனுபவம் மற்றும் மன்னிப்பின் பேறுபலனாக அமைதி விளங்குகின்றது. அனைத்து வகையான வன்முறை மற்றும் ஒடுக்குமுறைகளையும் நிராகரிப்பதற்கு உதவுவதும் அமைதியே என்றும் திருத்தந்தை தெரிவித்தார்.

அமைதியை உருவாக்குதல் என்பது ஒரு கைவினைச்செயலாகும். காலத்திற்கும் நீடித்த செயல்முறையான இவ்வமைதியை ஆர்வம், பொறுமை, அனுபவம் மற்றும் விடாமுயற்சியுடன் செய்யவேண்டும்.

அமைதியை ஏற்படுத்துபவர்கள் பேறுபெற்றோர். பணி, உடன்பிறந்த உறவு நிலை, உரையாடல், இரக்கச்செயல்கள் போன்ற நமது அன்றாட செயல்களில் அமைதியை விதைக்க அர்ப்பணிக்கப்பட்ட நபர்களாக இருக்க செபத்தில் நிலைத்திருக்கவேண்டும்.

தங்கள் சொந்த சமூகத்தில் ஆரம்பிக்கப்பட்டு சமூகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் சுவர்களைக் கட்டாமல் பாலங்களைக் கட்டும் அமைதியின் கைவினைஞர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்களது கடமையைச் சரியாகச் செய்யும்போது சமூகத்தில் அமைதி நிலவுகிறது. இத்தகைய அமைதியின் கைவினைஞர்களாக நாம் அர்ப்பணிக்கப்படுவது உலகிற்குத் தேவை எனவும் பரிசுத்த பாப்பரசர் வலியுறுத்தினார்.

மெரீனா ராஜ் ...

2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன தேர்தல் நடத்துதல் (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவன தேர்தல் நடத்துதல் சட்டத்தின் 66உ அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கவேண்டிய 66இ அத்தியாயத்தின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

ஊவா மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.எம். விஜேநாயக்க ஆகிய நான் 2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன தேர்தல் நடத்துதல் (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவன தேர்தல் நடத்துதல் சட்டத்தின் 66உ அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கவேண்டிய 66இ அத்தியாயத்தின் கீழ் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் ஊவா மாகாணத்தினுள் அமைந்துள்ள சொரணாதொட்ட பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள தலைவர் பதவிக்கு புதிய தலைவரொருவரை தெரிவு செய்து நியமிக்கும் வேலைக்காகவான கூட்டம் 2022ஆம் வருடம் டிசம்பர் மாதம் 08ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு சொரணாதொட்ட பிரதேச சபை, சொரணாதொட்ட எனும் முகவரியில் அமைந்துள்ள சொரணாதொட்ட பிரதேச சபை கருவறை எனும் இடத்தில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எம்.எம். விஜேநாயக்க,
உள்ளூராட்சி ஆணையாளர்,
ஊவா மாகாணம்.

2022 நவம்பர் மாதம் 28ஆம் திகதி,
பதுளை, மாடின் சில்வா மாவத்தையில் அமைந்துள்ள,
ஊவா மாகாண உள்ளூராட்சித் திணைக்களம்.

மஹரகம நகர சபை

மஹரகம

பண்டங்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் 2023

2023ஆம் ஆண்டிற்கான, மஹரகம நகர சபைக்குத் தேவையான பண்டங்கள், மற்றும் சேவை வழங்களிற்கான வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல் 2022.11.28 முதல் 2022.12.11 வரை வார வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மேற்கொள்ளப்படும். அதற்கான அனைத்து தகவல்கள் மற்றும் விபரங்களை மஹரகம நகர சபையின் கணக்காளரிடம் அல்லது உத்தியோகபூர்வ இணைய தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி - 0112850265
தொலைநகல்- 0112850473
இணையத்தளம் Maharagama.uc.gov.lk

தலைவர்,
மஹரகம நகர சபை
மஹரகம.

நெகெனஹிர நுவரகம் பளாத பிரதேச சபை

2023ஆம் ஆண்டிற்கான, வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்துகொள்ளல்.

2023ஆம் ஆண்டில் நெகெனஹிர நுவுரகம் பளாத பிரதேச சபைக்குப் பண்டங்கள் மற்றும் சேவை வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்துகொள்வதற்கு நடவடிக்கைகள், மேற் கொள்ளப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களை பின்வரும் இணையதளத்தில் அல்லது தொலைபேசி இலக்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்

இணைய முகவரி: www.sites.google.com/view/npeps/
தொ.பே. இல: 025-2235581

2022.12.01 முதல் 2022.12.15 வரை இதற்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படுவதுடன், 2022.12.16 அன்று பி.ப. 3.00 இற்கு முன்னர் விண்ணப்பங்கள் இச்சபைக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

எஸ்.டீ. குமார தாஸ,
தலைவர்,
நெ.நு.பு. பிரதேச சபை,
விஜயபுர.

பெறுகை அறிவித்தல்

இலங்கை தேசிய வைத்தியசாலை, கொழும்பு - 10

இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு 200 Pair Multicore உள்ளக தொலைபேசி கம்பிகளை வழங்கி இணைத்தல்.

இலங்கை தேசிய வைத்தியசாலை பிரதான தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் இருந்து புதிய வெளிநோயாளர் கட்டிடத்துக்கு உள்ளக தொலைபேசி வசதிகளை வழங்குதல் சார்பாக திறந்த கேள்வி விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

தொடர்பு இல: SH/New OPD Cable/ 2022

02. மேற்படி வேலையை நிறைவேற்றுவதற்காக தகைமையான நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு இதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கக்கூடியதுடன் மீளளிக்கப்படாத ரூ. 3,500.00 வைப்பையும் இலங்கை தேசிய வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திய பின்பு 2022.11.29 முதல்2022.12.19ம் திகதி வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரையான காலத்திற்குள் இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல்கள் பிரிவில் குறித்த ஆவணங்களுடன் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

03. 2022.12.20 மு.ப. 10.00 இற்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

வைத்திய நிபுணர் டபிள்யூ. கே. விக்ரமசிங்ஹ
தலைவர்,
பிரதேச பெறுகைக் குழு,
இலங்கை தேசிய வைத்தியசாலை.



MULTI FINANCE

மல்டி :-பினான்ஸ் பீ.எல்.சீ.

செப்டம்பர் 30, 2022 இல் முடிவடைந்த ஆறு மாத காலப்பகுதிக்கான நிதிநிலை அறிக்கைகள்

2011 ஆம் ஆண்டின் நிதி வணிகச் சட்டம் எண். 42 இன் பிரிவு 29(5) க்கு அமைவாக நிதிநிலை அறிக்கைகளை வெளியிடுதல்

செப்டம்பர் 30, 2022 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான முக்கிய நிதியியல் தரவுகள் (கணக்காய்வு செய்யப்படாதது)

ரூபா மில்லியனில்	01.04.2022 இருந்து 30.09.2022 வரை	01.04.2021 இருந்து 30.09.2021 வரை
வட்டி வருமானம்	**51.87**	50.17
வட்டிச் செலவினம்	**(19.76)**	(13.51)
தேறிய வட்டி வருமானம்	**32.10**	36.66
வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகளிலிருந்தான இலாபம் / (நட்டம்)	**-**	-
ஏனைய வருமானம்	**5.05**	8.74
தொழிற்பாட்டு செலவினங்கள் (பெறுமதி இழப்பு நீங்கலாக)	**(53.73)**	(68.47)
பெறுமதி இழப்பு	**7.63**	(8.48)
வரிக்குமுன்னரான இலாபம்/(நட்டம்)	**(8.95)**	(31.55)
வரிகள்	**(2.67)**	(0.61)
வரிக்குப் பின்னரான இலாபம்/(நட்டம்)	**(11.61)**	(32.16)

குறிப்பு : அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிவிவரங்கள் விலக்குகளைக் குறிக்கின்றன.

30 செப்டம்பர் 2022 இல் உள்ளவாறு முக்கிய நிதியியல் தரவுகள் (கணக்காய்வு செய்யப்படாதது)

ரூபா மில்லியனில்	30.09.2022 இல் உள்ளவாறு	30.09.2021 இல் உள்ளவாறு
சொத்துக்கள்		
காசு மற்றும் வங்கி மீதிகள்	**45.79**	74.63
அரச பிணையங்கள்	**157.97**	89.87
தொடர்பான தரப்பினரிடமிருந்து வர வேண்டியவை	**-**	-
கடன்கள் (தொடர்பான தரப்பினரிடமிருந்து வரவேண்டியவை நீங்கலாக)	**277.96**	482.09
பங்குரிமை மூலதனத்திலுள்ள முதலீடுகள்	**0.003**	0.003
முதலீட்டுச் சொத்துக்கள் மற்றும் உண்மைச் சொத்துக்கள்	**71.15**	68.33
சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள்	**24.39**	27.03
ஏனைய சொத்துக்கள்	**28.49**	64.22
மொத்தச் சொத்துக்கள்	**605.76**	806.18
பொறுப்புக்கள்		
வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை	**4.22**	6.79
தொடர்பான தரப்பினருக்கு செலுத்தவேண்டியவை	**-**	0.95
வாடிக்கையாளர்களிடமிருந்தான வைப்புக்கள்	**252.45**	266.95
ஏனைய கடன்பாடுகள்	**-**	-
ஏனைய பொறுப்புக்கள்	**61.88**	69.85
மொத்தப் பொறுப்புக்கள்	**318.56**	344.54
பங்குரிமை மூலதனம்		
கூறப்பட்ட மூலதனம்	**898.38**	898.38
நியதி ஒதுக்கு நிதியம்	**5.39**	5.39
பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள்	**(627.83)**	(453.39)
ஏனைய ஒதுக்குகள்	**11.27**	11.27
மொத்த பங்குரிமை மூலதனம்	**287.20**	461.64
மொத்த பொறுப்புகள் மற்றும் பங்கு	**605.76**	806.18
பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி	**4.51**	7.26

குறிப்பு : கூறப்பட்ட தொகை பெறுமதி இழப்பு மற்றும் தேய்மானம் நீங்கலானவையாகும்.

தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள்

விடயம்	30.09.2022 இல் உள்ளவாறு		30.09.2021 இல் உள்ளவாறு	
ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனப் போதுமை (%)	**உண்மை**	**தேவையானது**	**உண்மை**	**தேவையானது**
அடுக்கு 1 மூலதன போதுமை விகிதம்	71.19	8.50	65.02	7.00
மொத்த மூலதன போதுமை விகிதம்	71.19	12.50	65.02	11.00
வைப்பு பொறுப்புக்களுக்கான மூலதன நிதிய விகிதம்	111.26	10.00	168.35	10.00
கடன் சொத்துப்பட்டியலின் தரம் (%)				
மொத்தச் செயற்படாக் கடன்களின் விகிதம்	57.71		50.06	
தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம்	8.07		16.26	
மைய மூலதன விகிதத்திற்கான தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம்	15.51		24.64	
ஒதுக்கு பாதுகாப்பு விகிதம்	49.63		49.22	
இலாபத்தன்மை (%)				
தேறிய வட்டி இலாபம்	8.86		11.56	
சொத்துக்கள் மீதான வருவாய்	-3.83		-7.98	
பங்குரிமை மூலதனம் மீதான வருவாய்	-8.09		-13.93	
வருமானத்திற்கான செலவு விகிதம்	144.64		150.83	
திரவத்தன்மை (%)				
தேவையான திரவச் சொத்துகளுக்கான கிடைக்கத்தக்க திரவச் சொத்து (குறைந்தபட்சம் 100%)	664.41		464.37	
வெளிவாரி நிதியத்திற்கான திரவச் சொத்துக்கள்	66.00		45.70	
விஞ்ஞாபனத் தகவல்கள்				
கிளைகளின் எண்ணிக்கை	7		7	
வெளிவாரி கொடுகடன் தரமிடல்	[SL] C+(Negative) (ICRA)		[SL] C+ (ICRA)	
கடந்த 6 மாதங்களில் விதிக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தண்டங்கள் தொகை (ரூ.மில்லியனில்)	-		-	
ஒழுங்குமுறைப்படுத்தல் வைப்புக் கட்டுப்பாடுகள்				
மொத்த வைப்புக்கள் மீதான உச்ச எல்லை (ரூ.மில்லியன்)	1250		600	
வைப்புக்களின் அளவைக் குறைத்தல் மாதம் ஒன்றிற்கு (ரூ.மில்)	25		25	
வைப்புக்களை முடக்குதல்	-		-	
ஒழுங்குமுறைப்படுத்தல் கடன்பாடுகள் கட்டுப்பாடுகள்				
மொத்த கடன்பாடுகள் மீதான உச்ச எல்லை (ரூ.மில்லியன்)	-		-	
கடன்பாடுகள் சொத்துப்பட்டியல்கள் அளவைக் குறைத்தல் மாதம் / காலாண்டு / ஆண்டு ஒன்றிற்கு (ரூ.மில்)	-		-	
கடன்பாடுகளின் முடக்கம்	-		-	
ஒழுங்குமுறைப்படுத்தல் கடன்வழங்கல் கட்டுப்பாடுகள்				
மொத்தக் கடன் வழங்கல் சொத்துப்பட்டியல் மீதான உச்சஎல்லை (ரூ.மில்)	1500		1300	
கடன்வழங்கல் சொத்துப்பட்டியல்கள் அளவைக் குறைத்தல் மாதம் (ரூ.மில்)	50		50	
புதிய கொடுகடன் வசதிகளை வழங்குதல் அத்துடன் / அல்லது ஏற்கனவே உள்ள கொடுகடன் வசதிகளின் தவணைக் காலத்தை நீடித்தல் மீதான கட்டுப்பாடுகள்	-		-	
வேறு ஏதேனும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகள்	N/A		N/A	

உறுதிப்படுத்தல் :

கீழே கையொப்பமிட்டுள்ள மல்டி பினான்ஸ் பீ.எல்.சீ யின் இயக்குனர், இணங்குவிப்பு அலுவலர் மற்றும் கணக்காளராகவுமுள்ள நாங்கள் கூட்டாக பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றோம்.

(அ) மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இக்கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, மல்டி :-பினான்ஸ் பி.ல்.சி இன் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

(ஒப்பம்)	(ஒப்பம்)	(ஒப்பம்)
ரவீந்திர யாதவரா	**ருவன் கருப்பையா**	**வருண பெரேரா**
பணிப்பாளர்	கணக்காளர்	இணங்குவிப்பு அலுவலர்
17 அக்டோபர் 2022	17 அக்டோபர் 2022	17 அக்டோபர் 2022

Licensed by the Monetary Board of the Central Bank of Sri Lanka under the Finance Business Act No. 42 of 2011.

www.skillsads.com

கிழக்கின் குரல்

மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில்

சமாதானத்தை வலியுறுத்தி முரண்பாட்டு நிலை மாற்றத்துக்கான பன்மைத்துவ செயற்பாடுகள்

மட்டக்களப்பு விசேட நிருபர்

இனங்களுக்கிடையில் சமாதானத்தை வலியுறுத்தி முரண்பாட்டு நிலைமாற்றத்துக்கான பன்மைத்துவ செயற்பாடுகள் பற்றிய 3 நாட்களைக் கொண்ட வதிவிடப் பயிற்சி முகாமின் ஆரம்ப நிகழ்வு, மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் சர்வோதய நிலையத்தில் நேற்று (28) நடைபெற்றது.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவையின் மாவட்ட இணைப்பாளர்களான ஆர்.மனோகரன் மற்றும் அப்துல் ஹமீத்தின் ஒழுங்கமைப்பில், 'இளைஞர் சமாதானப் பூங்கா' எனும் தொனிப்பொருளில் இப்பயிற்சி நடத்தப்படுகின்றது.

பன்மைத்துவ வாதம் மற்றும் பன்மைத்துவ சமூகத்தை கட்டியெழுப்புவதற்காக பொருத்தமான சிவில் சமூக முயற்சிகளின் ஊடாக மோதல் நிலைகளில் மாற்றங்களையும் மதங்களுக்கும் இனங்களுக்குமிடையில் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பி, நீண்டகாலமாகவுள்ள இனப் பிரச்சினைக்கு தீர்வைப் பெறுவது தொடர்பில் இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் திட்ட முகாமையாளர் சமன் செனவிரத்ன வளவாண்மையை நடத்தினார்.

குழு தலைமைத்துவத்தை விருத்தி செய்யும் செயற்பாடுகள் தொடர்பில் பயிற்றுனர்களாகக் கலந்து கொண்ட சத்துர டில்ஷான் மற்றும் டி.எம்.ரேணுகா, இப்பயிற்சியில் கலந்துகொள்வோரின் எண்ணங்களை உள்வாங்கி சுயாதீனமானதும் பக்கச்சார்பற்றதுமான வெளிப்படுத்துகைகளைப் பெறுவதற்கான நெறிமுறைகளை பயிற்சிகள் மூலம் வழங்கினர்.

அத்துடன், வெறுப்புப் பேச்சுகள் மற்றும் தவறான தகவல் பரிமாற்றங்களினால் நல்லிணக்கத்துக்கு ஏற்படும் பாதகங்கள பற்றியும் அவற்றை தடுப்பதற்கான மூலோபாயங்கள் பற்றியும் இங்கு விளக்கமளிக்கப் பட்டன.

திண்மக்கழிவகற்றும் இடத்தை மாற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டம்

கந்தளாய், மூதூர் தினகரன் நிருபர்கள்

அறுவைச்சாலை மற்றும் திண்மக்கழிவு அகற்றும் இடத்தை பிறிதொரு இடத்துக்கு மாற்றுமாறு கோரி தோப்பூர், அப்rார் நகர் மக்கள் நேற்று (28) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

இவ்விடயம் தொடர்பில் மூதூர் பிரதேச சபைத் தவிசாளர் எம்.எம். ஏ.அரூஸின் கவனத்துக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் கொண்டு வந்ததை தொடர்ந்து, மக்களின் நலனை அவர் கருத்தில் கொண்டுள்ளார். இந்நிலையில், அறுவைச்சாலை மற்றும் திண்மக்கழிவு அகற்றும் இடத்தை பொருத்தமான பிறிதொரு இடத்துக்கு மாற்ற வேண்டிய முன்னேற்பாடுகளை முறைப்படி செய்யுமாறும், மூதூர் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார்.

இதன்போது மகஜரொன்றையும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட சிவில் அமைப்புகள் கையளித்தனர்.

சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக நடவடிக்கை தேவை

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

சிறுவர் துஷ்பிரயோகங்கள் மறைக்க முற்படக் கூடாதென்பதுடன், அவற்றை உரிய தரப்பினரிடம் தெரிவித்து, துஷ்பிரயோகத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென, காத்தான்குடிப் பிரதேச செயலாளர் யு. உதயஸ்ரீதர் தெரிவித்தார்.

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் சிறுவர் பாதுகாப்பு பொறிமுறை தொடர்பான விழிப்பூட்டல் செயலமர்வொன்று நேற்று (28) நடைபெற்றது. அதன் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றியபோதே, அவர் இவ்வாறு கூறினார். இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "சிறுவர் துஷ்பிரயோகங்களை சிலர் மறைக்க முற்படுகின்றனர். அவ்வாறு மறைக்கும் போது பாரிய விளைவுகளை உரிய தரப்பினர் எதிர்நோக்க ஏற்படும்.

இது தொடர்பான விழிப்புணர்வை கிராம மட்டத்திலுள்ளவர்கள் அறிந்து வைத்துக் கொள்ள வேண்டும். அதற்காகவே இந்த செயலமர்வு நடைபெறுகின்றது" என்றார்.

அக்கரைப்பற்று பாதிக்கப்பட்ட மகளிர் மன்றத்தின் ஏற்பாட்டில், இனங்களுக்கிடையிலான நல்லிணக்க வீதி நாடகமொன்று நடத்தப்பட்டது. அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரதான முன் வீதியில் அண்மையில் மேற்படி நாடகம் நடத்தப்பட்டது.
(படம்: திராய்க்கேணி தினகரன் நிருபர்)

கல்முனை

இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலய மாணவன் 9 A சித்தி

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர், க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளார்.

கடந்த 2021ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் தோற்றிய என்.எம். நப்றத் எனும் மாணவனே 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளார்.

அத்தோடு, இப்பாடசாலையைச் சேர்ந்த எஸ்.எச். பாத்திமா ஹிறா 7 ஏ, 2 பி சித்திகளை பெற்றுள்ளார்.

கடந்த 2021ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின.

இலங்கை வங்கி

ஏலவிலை கூறலுக்கான அழைப்பு

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பரிசுப் பொருட்களை விநியோகிப்பதற்கு புகழ்பெற்ற உற்பத்தியாளர்களிடமிருந்து / விநியோகஸ்தர்கள் அல்லது அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஏலவிலை கூறல்கள் இத்தால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திர இல	P/PROC/2022/195
பண்டம் / சேவைகளின் விபரம்	ரண் கெகுளு சிறுவர் சேமிப்புக் (RKG) கணக்குரிமையாளர்களுக்கான பரிசுப்பொருட்களைக் கொள்வனவு செய்தல்

விபரம்	எண்ணிக்கை	பிணை முறியாக (ரூ.)
பாடசாலைப் பைகள்	32,000	696,000/-

மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம்	ரூபா.4,717.95 (ரூ.4,000.00 + ரூ.102.56 SSCL + ரூ.615.39 VAT)
ஏலவிலை கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் கடைசித் திகதியும் நேரமும்	2022.12.19 1500 மணி வரை
ஏலவிலை கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் நேரம்	0900 மணி முதல் 1500 மணி வரை
ஏலவிலை கூறல் முடிவடையும் / திறக்கும் திகதியும் நேரமும்	2022.12.20 1000 மணி வரை
ஏலவிலை கூறலைத் திறக்கும் காலம்	ஏலவிலை கூறல் முடிவடைந்த உடன்
முன்கூட்டிய விலைகூறல் கூட்டம் நடைபெறும் திகதியும் நேரமும் இடமும்	2022.12.09ஆம் திகதி 1100 மணிக்கு இலங்கை வங்கித் தலைமையகக் கட்டடத்தின் 03ஆம் மாடியில் இடம்பெறும்

1. விலைகூறல் ஆவணத்தொகுதியை வேலை நாட்களில் 0900 மணியிலிருந்து 1500 மணி வரை இலங்கை வங்கியின் 14ஆம் தளத்தில் உள்ள சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் திருப்பிச் செலுத்தாக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின்னர் பெற்றுக்கொள்ள முடியும்.
2. பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்களை இலங்கை வங்கி தவிர்ந்த மற்றொரு உரிமம் பெற்ற வணிக வங்கியிடமிருந்து பெற்றதும் இலங்கை வங்கியினால் ஏற்றுக்கொள்ளக் கூடியதும் 2023.04.11ஆம் திகதி வரை செல்லுபடியானதுமான வங்கி உத்தரவாதமாக / பிணை முறியாக இணைத்து அனுப்ப வேண்டும். பிணை முறிக்குப் பதிலாக பண வைப்பு / வங்கிக் கட்டண ஆணை / வங்கி வரைவு என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படும். ஏலவிலை கூறுவோரால் வரையப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
3. கேள்விப் பத்திரங்கள் குறித்த முடிவுத் திகதியன்று 1000 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும். 1000 மணிக்குப் பின்னர் பெறப்படும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதோடு திறக்கப்படாமலே திருப்பி அனுப்பி வைக்கப்படும்.
4. இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அல்லது கேள்விப்பத்திரமொன்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.
5. PCA 3 படிவமானது ஏலவிலை கூறலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
6. மேலதிக விபரங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி பிரதான முகாமையாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி,
"இலங்கை வங்கிச் சதுக்கம்", இல.01,
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.
தொலைபேசி இல. 2544310, 2434786

1975 BOC CALL CENTRE www.boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

கிராமிய வீட்டு ஆடு வளர்ப்புத் திட்டம்

திராய்க்கேணி தினகரன் நிருபர்

பின்னடைவான கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான கிராமிய வீட்டு ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், தெரிவு செய்யப்பட்ட 5 பயனாளிகளுக்கு தலா 2 ஆடுகள் படி வழங்கப்பட்டன. அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் வைத்து அண்மையில் இவ்வுதவித் திட்டம் வழங்கப்பட்டது.

கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம் மற்றும் அம்பாறை மாவட்ட செயலாளரின் பணிப்பு ரைக்கமைய இவ்வுதவித் திட்டம் வழங்கப்பட்டது.

கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் வாகனம் விபத்து

ரொட்டவெவ குரூப் நிருபர்

மட்டக்களப்பு திருகோணமலை பிரதான வீதியில், மூதூர் மல்லிகைத்தீவு சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில், மூவர் காயமடைந்துள்ளதைத் தொடர்ந்து மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பிலிருந்து கடமைக்காக திருகோணமலை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவுக்குச் சொந்தமான வாகனம் மின் கம்பத்துடன் மோதி நேற்று (28) விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தின் போது, மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் கோபாலரட்ணம் உட்பட ஊழியர்கள் இருவர் காயமடைந்துள்ளனர். இம்மூவரில் மட்டக்களப்பு, பெரியகல்லாறு பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக, வைத்தியசாலையின் பேச்சாளர் தெரிவித்தார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தென்கிழக்கு பல்கலையில் முப்பெரும் விழா - 2022

சாய்ந்தமருது விசேட நிருபர்

தென்கிழக்குப் பல்கலையின் முப்பெரும் விழா 2022, அப்பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஆர்.ஜே. வலைய மைப்பின் ஏற்பாட்டில் கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற இவ்விழாவில், பல்வேறு போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், ஊடகம் மற்றும் சமூக சேவை சார்ந்த பிரமுகர்கள் சேவை நலன் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

சமூக மேம்பாட்டில் ஊடகங்களின் பங்களிப்புகள், பல்கலைக்கழகங்களுக்கும் பொதுமக்களுக்கும் உள்ள தொடர்புகள், நாட்டில் தலைதூக்கியுள்ள போதைப்பொருள் பாவனை தடுப்பு உள்ளிட்டவை தொடர்பில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசாரப் பீடத்தின் பீடாதிபதி, பேராசிரியர் கலாநிதி எம்.எம்.பாஸில் உரையாற்றியிருந்தார்.

அல்ஹம்றா மத்திய கல்லூரியில் இரு மாணவருக்கு 9A

தோப்பூர் குறூப் நிருபர்

தற்போது வெளியாகிய க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் அல்ஹம்றா மத்திய கல்லூரியைச் சேர்ந்த 2 மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளதாக, அக்கல்லூரியின் அதிபர் எஸ்.எம்.றஹீம் தெரிவித்தார்.

இம்மாணவர்கள் 9 ஏ சித்தி பெற்றுள்ளதாகவும், அதிபர் தெரிவித்தார்.

கடந்த 2021ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கான பெறுபேறுகள் கடந்த 25ஆம் திகதி வெளியாகியிருந்தன.

அக்கரைப்பற்றில் 49 மாணவருக்கு 9A

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

அக்கரைப்பற்றுக் கல்வி வலயத்தில் 49 மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் ஏ சித்தி பெற்று அக்கரைப்பற்றுக் கல்வி வலயத்துக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

அக்கரைப்பற்றுக் கல்விக் கோட்டத்தில் 26 மாணவர்களும், அட்டாளைச்சேனைக் கல்விக் கோட்டத்திலிருந்து 14 மாணவர்களும் பொத்துவில் கல்விக் கோட்டத்திலிருந்து 9 மாணவர்களும் 9 ஏ சித்தி பெற்றுள்ளதாக, அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக திட்டமிடல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையில் 32 மாணவர்களுக்கு 9 A; 20 மாணவர்களுக்கு 8 A

காரைதீவு குறூப் நிருபர்

கடந்த 2021ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில், கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியைச் சேர்ந்த 32 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளதாக, அப்பாடசாலை அதிபர் அருட் சகோ. செபமாலை சந்தியாகு தெரிவித்தார்.

இதேவேளை, 20 மாணவர்கள் 8 ஏ சித்திகளைப் பெற்றுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

கடந்த 2021ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள் கடந்த 25ஆம் திகதி வெளியாகின.

இலங்கையில் தமிழ் ஆய்வாளர்களுக்கு பெரும் பற்றாக்குறை

"நடைமுறை பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து தீர்வுகளை முன்வைக்கக் கூடிய ஆய்வாளர்கள் தேவை"

தென்கிழக்குப் பல்லைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்

இல ங்கையிலே ஆய்வாளர்களுக்கு மிகப்பெரிய தட்டுப்பாடு நிலவுகிறது. அதுவும் தமிழ் பேசும் சமூகத்தில் மிகப்பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. கல்வி அமைச்சர் அண்மையில் குறிப்பிடும் போது 22 மில்லியன் சனத்தொகையில் குறிப்பாக சுமார் 22,000 ஆய்வாளர்கள் தேவைப்படுகிறது. ஆக 5000 ஆய்வாளர்கள் தான் இலங்கையில் இருக்கிறார்கள். அதில் நடைமுறையில் ஆய்வு களை மேற்கொள்பவர்கள் 2000 பேர் இருக்கிறார்கள். 3000 ஆய் வாளர்கள் கோட்பாட்டு ரீதியிலான ஆய்வாளர்கள் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

ஆகவே எங்களுக்குத் தேவை நடைமுறையில் உள்ள பிரச்சி னைகளுக்கு முகம்கொடுத்து தீர்வுகளை முன்வைக்கக் கூடிய ஆய் வாளர்கள் தான். அதிலும் தமிழ் பேசும் சமூகத்தில் ஆய்வாளர்கள் மிகக் குறைவு என்று தென்கிழக்குப் பல்லைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.கண்டி முஸ்லிம் வர்த் தக சங்கம், தமிழ் வர்த்தக சங்கம் இணைந்து நடத்திய நூல் வெளியீ டு,கௌரவிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்,..

இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு.தமிழ், முஸ்லிம் வர்த்தக சங்கங்களும் இணைந்து நடத்துவதைப் பாராட்டுவதோடு மட்டுமல்ல ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக கொள்ளுதல் வேண்டும்.

